# வாழும் தாயுமானவர்

( உரைநடை )



இரா. இளங்குமரன்

# வாழும் தாயுமானவர்

(உரைநடை)

**இரா. இளங்குமரன்**

திருவள்ளுவர் தவச்சாலை
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிராப்பள்ளி மாவட்டம் 620 101
பேசி : 2685328

நூற்குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | **வாழும் தாயுமானவர் (உரைநடை)** |
| ஆசிரியர் | **இரா. இளங்குமரன்** |
| முதல் பதிப்பு | 2004 |
| வெளியீடு | **திருவள்ளுவர் தவச்சாலை** |
| தாள் | 11.6 கி. என்.எஸ். மேப்லித்தோ |
| அளவு | 1/8 கிரவுன் |
| எழுத்து | 12 புள்ளி |
| பக்கம் | 80 |
| படிகள் | 1000 |
| விலை | **30** உருபா |
| நூலாக்கம் | பாவாணர் கணினி<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | இனியன் |
| அச்சு | வெங்கடேசுவரா ஆப்செட்<br>20 அஜீஸ் முல்க் 5வது தெரு,<br>ஆயிரம் விளக்கு,<br>சென்னை - 600 006. |
| கட்டமைப்பு | கெட்டிக் கட்டமைப்பு |

கருவூர்,

அன்னை சாரதா அறிவியற் கல்லூரி நிறுவனர்

தவப்பெருந்திரு. ஆத்மானந்த அடிகளார்.



**காணிக்கை**

வாழும் தாயுமானவராய்
வாழ்வாங்கு வாழ்ந்து
எவ்வெவரும் இனிதுவாழ
வழிகாட்டும் தவத்தோன்றல்
ஆருயிர்க்கினியர் அண்ணல் அடிகளார்
ஆத்மானந்தர் அவர்களுக்குக்
**காணிக்கைக்** கையுறையாக வழங்கப்படுவது
வாழும் தாயுமானவர் என்னும்
இக்குறும் பாவிகம் ஆகும்.

**நூலாசிரியன்**

நூல் வெளியீட்டுக்கு உதவிய
பொறிஞர் திரு. **சுப்பிரமணிய வசந்தா** அவர்கள்



## வெளியீட்டு விழுமியர்க்கு வாழ்த்து

தண்ணருள் வடிவத் தாயு மானவர்
கண்ணிடைக் காணவும் கருத்திடைப் புகவும்
ஆகிய காட்சியாய் அமைந்த பாவிகம்
ஆகிய இதனை அறிந்ததும் ஆர்வமாய்ப்
பொறிஞர் பொலிதமிழ் அறிஞர் ஆர்வலர்
செறிவுறு கேண்மைச் சீர்த்தியர் திருமிகு
**சுப்பிரமணிய வசந்தைப்** பெரியவர்
ஒப்பிய பதிப்பில் ஒன்றி, யாமே
வெளியிட விழைவேம் வேண்டுவேம் என்று
களியுற ஏற்றுக் கையிடைக் கனியாய்த்
தமிழுலாக் கொள்ளத் தந்தமை போற்றி
அமிழ்தன தமிழால் அண்ணல் வாழிய
குவிபுகழ் அம்மையும் குடிநலப் பாங்குடன்
புவிநலம் சிறக்கப் பொலிவொடும் வாழ்கென
நலமுற வாழ்த்தி நயந்தனென் இனிதே.

# வாழும் தாயுமானவர்
# பாவிக உரைநடை முகம்

*முன்னோ பின்னோ மூண்டெழா எழுச்சியின்*
*முகிழ்ப்பாய்க் கிளர்ந்தது, தாயுமானவர் குறும்*
*பாவிகம். அதன் உரைநடை ஆக்கம் இது.*

*ஆயிரம் ஆயிரம் அயலே நிகழினும்,*
*நாம் எளிதல் அதிர்ந்து போவதில்லை.*
*ஆனால், அடுத்தே அவலம் கண்ணேரில் காணின்,*
*'அவரெவர்' என்பதும் எண்ணாதே,*
*அழுந்திய துயரம் ஆக்குதல் மெய்ம்மை!*

*அருமைச் செல்வியர் மூவர், தவப்பெரும்*
*அடிகளார் ஒருவர் அருள்வழி ஆணையால்,*
*அரும்பிய பனிமலர் என்ன, அணுகித் தோன்றினர்;*
*பரிவால் பணிந்தனர்;*
*அவர்க்கெனத் தந்த அறையில் தங்கினர்.*
*முதற்கண், அவர்கள் இருக்கும் இடத்தின்*
*தூய்மையில் ஒன்றினர். அடுத்துச்*
*சூழல் தூய்மையில் தோய்ந்தனர்.*
*நூல்களில் தூசி தட்டினர்.*
*பணியில் ஊன்றினர்.*
*கடமைப் பிறப்பெனக் காட்டினர்;*
*கனிவின் வடிவென நாட்டினர்;*
*குறையா இறைமை*

குன்றா நிறைமை
எல்லாம் இணைந்து நின்றனர்.
நான்கு நாள்கள் தவச்சாலை வாழ்வாய்த்
தங்கினர்.
பணியில் மணந்தனர்.
உரையில் உவந்தனர்;
உணவில் ஒன்றினர்;
வினவலில் விளக்கம் பெற்றனர்;
ஒளிமுகம் காட்டல் அன்றிச்,
சோர்வினை அறியாச் சுடர் விளக்காயினர்.

மூவருள் ஒருவர், தந்தையை முன்னும்
தாயரைப் பின்னும் இழந்தவர்.
ஏற்றுப்போற்ற இருப்பார் தாமும்
ஏதிலிபோல எண்ணினர்.
பள்ளிப்பாவை கள்ளிக் காட்டில்
ஆடுமாடு மேய்த்து அலைந்த தோடும்,
அலந்தது உண்டு அவலம் உற்றனர்.
அருள் நெஞ்சர் ஒருவர்,
அழைத்துச் சென்று,
**அருள்வளர் திருமடம்** ஒன்றில்
அவரை உய்த்தனர்.

**சோற்று மடமிலை** அது;
**வேற்று மடமும் இலை** அது.
**வந்தவர்க் கெல்லாம் நொந்தவர்க் கெல்லாம்**
**சொந்தங் காட்டிச் சுடரச் செய்யும்**
**அருள்வளர் கலைமடம்** அதுவாம்.
ஏற்ற கல்வியைப் போற்றும் வகையில்

நோற்ற பேறென வழங்கும் பண்டைக்
'**கொடை மடம்**' என்னக் குலவிய ததுவாம்.
"**எவரும் இல்லார் இல்லை!**
**எதுவும் இல்லார் இல்லை!**
**எவரெவர் தாமும் எல்லாம் இருப்பார்.**
**எய்துக**" இவணெனப் போற்று திருமடம்.

தொடக்கக் கல்வி தொட்டனள் செல்வி.
அன்னை, தந்தை, அரவணை, சுற்றம்,
செல்வம், தேட்டு, தோழமை எல்லாம்
தாமே யாகித் துறவர் அடிகள் தாங்கினார்.
தண்ணளியாலே வளர்ந்தார் செல்வியார்.
அவரைக் கேட்டே சிலபல அறிந்தேன்.
அடிகள், **அருளடிகள்** ஆயினார்!
ஆருயிர்க் குதவும் ஆன்மநேய வடிவர் ஆயினார்!
நிகழ்ந்தவை கேட்டேன் மேலும்!
நெஞ்சம் உருகினேன்.
அழுதாள்! அழுதேன்!
இந்த **அழுகை, அழுகையை ஆற்றுமோ?**
மாற்றியும் அமைக்குமோ?
ஆற்றியும் மாற்றியும் அமைத்த,
**அருளின் பொழிவை** -
**அமிழ்த மழையை** -
**ஆருயிர் மருந்தைத் தொழுதேன்!**

அருளைப் பற்றியும் -
அன்பைப் பற்றியும் -
அறத்தைப் பற்றியும் -
ஆயிரம் ஆயிரம் பக்கம் எழுதுவேன்!

*ஆயிரம் ஆயிரம் பாக்கள் இயற்றுவேன்!*
*ஆயிரம் ஆயிரம் மேடையில் பொழிவேன்!*
*ஆனால்,*
*ஆருயிர்ப் பணியாய்*
*ஐந்துபேர் எனினும்....... !*

*"சான்றோரும் உண்டுகொல்*
*சான்றோரும் உண்டுகொல்*
*ஈன்ற குழவி*
*எடுத்து வளர்க்குறூஉம்*
*சான்றோரும் உண்டுகொல்*
*சான்றோரும் உண்டுகொல்"*

*என்று கண்ணகித் தெய்வம், பெண்ணியவாயால்*
*மாநகர் மதுரையில்*
*வினாவிய வினாவுக்கு,*
*'நானுளேன்' என்று*
*ஏற்றுவந்தனென் இல்லை!*

*நூலகம் தேடி வருவார் தமக்கும்,*
*மனவளம் நோக்கி வருவார் தமக்கும்,*
*தமிழ் நெறி நோக்கித் தழுவுவார் தமக்கும்*
*வந்த வந்த வேளைகளிலேனும்,*
***பருகவும் உண்ணவும் பாலிக்கும் பேறுதானும்***
***முற்றாக வாய்த்தல் இல்லை!***

*என் நிலை, இந் நிலையாக,*
*பெற்றோரை அறியாப் பிறவியர் தமக்குப்*
*பெற்றோர் செய்யாப் பெருஞ் செயல் எல்லாம் -*

*பெற்றோர் இருந்தும் பிள்ளைகள் தமக்கு அப்*
*பெற்றோர் செய்யாப் பெருஞ் செயல் எல்லாம் -*
*தாயே யாகித் தாங்கு தெய்வக்*
*குணமலை யாகித் திகழும் அடிகளை*
***நெஞ்சத் திரையில் நீரால் ஓவியம் தீட்டினேன்.***

*"நூற்றுவர் தம்மைத்தானே போற்றுதல் புரிவேம்;*
*இன்னும்*
*நூற்றுவர் தம்மையும் போற்றும் வகையில்*
*இறையருள்*
*எய்துக" என்று நோற்றுக்கிடக்கும்,*
*ஆன்மநேய அடிகளார்*
*ஆக்கப் பணியே*
***இயக்க இயங்கிய இயக்கம் -***
***ஆம்! இலக்கிய இயக்கம் -***
***இக்குறும் பாவிகமாகும்!***

*அடிகள் பேரோ - அருமகள் பேரோ -*
*அமைவுறும் ஊரோ -*
***வெளிப்படக் காட்டா***
***ஒளிச் சுருள் ஈதாம்!***

***அகப்பொருள்** தலைவன் தலைவியர்,*
*தோழன் தோழியர், ஏவலர் என்பார்*
*எவர்தாம் **மெய்ப்பெயர்** கொள்வார்?*

*இயற்பெயர் இயம்பா இயற்கை அகப்பொருள்*
*இயக்கிய இயக்கம்*
***புனைபெயர் பூத்துப் பொருந்துதல் முறையாம்!***

இதில் வரும் **பாவையின்** பள்ளிவாழ்வின் மூலம் இரண்டு நிகழ்வுகள். ஒன்று கழுகுமலை வெட்டு வான் கோயில் பற்றிய செய்தி. கலைப் பொறாமை, தந்தை மகன் எனவும் பாராது என்பது அது. மற்றொன்று தஞ்சை வீணைவல்லான் ஒருவன் வரலாறு. முன்னது சிற்பக்கலை! பின்னது யாழ்க் கலை. இரண்டும் தன் மக்கள் என்பதும் எண்ணாப் பொறாமைப் பாவியின் செயல்கள்.

பாவையின் பின்னை வாழ்வில் தன் உடைமையும் உழைப்பும் முற்றாகத் துறவுக்கும் தொண்டுக்குமே என்று வாழ்ந்த வரலாறு, வாழும் மணிமேக லையார் ஒருவர் பற்றிய உள்ளுறை கொண்டது.

இனிப் **பனிமலர் பாரி** என்பார் கிளைக் கதை யாக உருவாக்கம் பெற்றமை மனோன்மணீயம் சிவகாமி சரிதம் ஒப்பது.

**பொறிஞர்** ஒருவர்: அவர்தம் இளவல் **மருத் துவர்;** இவ்விருவர் தம் இணையரும் எம்முயர் மக்களாம் உரிமை பூண்டவர். இவர்தம் மக்களுள் ஒருவர் முதற்கண் மருத்துவம் பயின்றார். மருத் துவர் தம்மைத் தேர்ந்தார். என் சொல்வழி நின்று நன்மணம் கொண்டார். அவர்தம் செயலும் உற்றார் உறவினர் செயலும் உள்ளுறையாகக் கிளர்ந் தது **பனிமலர் பாரிவேள் இணைப்புப் புனைவு.**

குறும்பாவிகக் குறுந்துள்ளலாகிய இன்னவை நூலறி புலமையரால் போற்றப்பட்ட மரபினவை.

இதில் யானும் உறுப்பாகி உள்ளேனா எனின், **பாடுவோன் இல்லாப் பாவிகம் இல்லையே. அது பயில்வார்க்குப் புலப்படும்.**

## பாவிக உறுப்பினர்

அருளடிகள் : அருளூர், அருளக அடிகள். இவர். பாலர் பள்ளிமுதல் கல்லூரி வரைக்கும் பல்வேறு கல்விநிலையங்களும், முதியர் இல்லம், குழந்தையர் காப் பகம், மகளிர் மன்றம், தொழில் களம் என்பவை உருவாக்கமும் செய்த வர். தாயுமானவர் எனப் போற் றப்படுபவர்.

பிச்சை : பெரியவர் பிச்சையார் பிறவித் தொண்டர்; பிறர்க் கென வாழும் பெருந்தகை; அன்னக் காவடி எடுத்து முதியர்சிலரைப் பேணியவர்; பின்னர் முதுவரில்லம், குழந்தையர் காப்பகம் பேணி யவர். திருமகள் திருமகளாக மூலவர்.

திருமகள் : ஏதிலி நிலையில் இன்னலே தாங்கியவள்; பிச்சையார் பேண லால் அருளூர் சார்ந்து

பேரும் பெருமையும் பிறவிச் சீர்மையும் பிறங்க வாழும் பெற்றியள். அடிகள் நிழலாய் அமைந்த அருள் தொண்டர்.

பாவை : செல்வச் செருக்கில் சீற்றப் பொருளாய் இருந்து மாற்ற முற்று மணிமேகலைப் பிறவி யாய், திருவின் நிழலாய்த் திகழ்பவள். துணிவும் துறவும் ஒருங்கே பற்றிய தூயள்.

எழிலன் : பாவையின் மாமன் மகன்; தூண்டுவார் உரையால் பாவையைக் கண்டு உண்மை தெளிந்த உயர்வன்.

பொன்னியம்மை : திருமகள் மாமி; பொன்னி யின் தாய்.

பொன்னி : பொன்னியம்மை மகள். பள்ளி செல் சிறுமி.

பூமணி : பொன்னியம்மையின் தோழி; சோதிடத் துணை.

சிலம்பாயி : தொழிலக ஊழலை ஒழிக்க உதவியாய் நின்றவள்; கூர்த்த மதியள்.

தங்கத்தாய் : தொழிலகச் சுரண்டலில் ஒருத்தி. கரவால் தேடியவை,

கரவால் ஒழிந்தது போக, உள்ளதை ஒப்படைத்துத் திருந்தி நின்றவள்.

பனிமலர் : திருமகள் பள்ளித் தோழி; பாரிவேள் துணை; மருத் துவத் தொண்டு புரிய அரு ளகம் தேடித்துணையொடு வந்தவள்.

பாரிவேள் : பனிமலர் துணைவன். பண்பு சால் தொண்டில் பதிவான வன்.

அங்கயற்கண்ணி

அருள்மலர் : தாயும் சேயுமாம் இவர்கள், புதுப் பிறப்பும் புதுப்பெயரும் பெற்றுப் பிறங்கியவர். அருள் நிலையத் துறைஞர்.

ஊரவர், உறவினர், தொண்டர், தோழமையர், கற்பவர், மருத்துவர் ஆயோர்.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| | பாவிக உரைநடை முகம் | 7 |
| | பாவிக உறுப்பினர் | 13 |
| 1. | எங்கே அவள்? | 17 |
| 2. | கணியக் கலக்கம் | 19 |
| 3. | அமுத சுரபி | 21 |
| 4. | அருளகம் புகுதல் | 25 |
| 5. | திருமகள் கலைமகள் | 27 |
| 6. | அருள் நிறை இருவர் | 29 |
| 7. | தீதும் நன்றாம் | 33 |
| 8. | முதுமையும் இளமையும் | 40 |
| 9. | நச்சு வளையம் | 42 |
| 10. | தொழிலக ஆக்கம் | 46 |
| 11. | அன்பின் வழி | 51 |
| 12. | உருகிய உருக்கு | 56 |
| 13. | ஒருநாள் | 58 |
| 14. | பனிமலர் வரவு | 63 |
| 15. | தாயுமானவர் | 67 |
| | குறும்பாவிக உரைநடை | 71 |

# வாழும் தாயுமானவர்

## (உரைநடை)

### 1. எங்கே அவள்?

திருவளர்குடி என்பதோர் ஊர்; அங்கிருந்த ஒரு சிறுமியின் பெயர் திருமகள்.

திருமகள் பிறந்த சிறிதுகாலத்திலேயே தந்தையை யும் தாயையும் இழந்தாள். அவளை வளர்த்து வந்த மாமனும் இறந்தான். இவ்விறப்புகள் எல்லாம் திருமகள் பிறந்த நேரக் கேடாக எண்ணி மாமி பாடாய்ப் படுத்தினாள். பள்ளி செல்லும் பருவத் தில் ஆடுமாடு மேய்க்கவும், பற்றுத் தேய்க்கவும் வீடு கூட்டவும் வைத்தாள். அடியும் உதையும் திட்டுமே வாழ்வாகிய அவளுக்குக் கஞ்சியும் கந்தையுமே உணவும் உடையும் ஆயின. அவள் பெயர் திருமகள் என்றாலும், மாமியும் மாமி மகள் பொன்னியும், 'தின்னி' என்றே அழைத்தனர். பொன்னி செல்வ மாக வளர்க்கப்பட்டாள்; பள்ளிக்குச் சிறப்புடன் அனுப்பப்பட்டுப் படித்தாள். படிப்பில் ஆர்வ முடைய திருமகள் பொன்னியின் புத்தகத்தைப் பார்க்கவோ, பக்கத்து வீடு செல்லவோ கூட உரிமை

இல்லை. அவளுக்கு உரிமையானவை திட்டும் உதையுமே!

ஒருநாள் பொன்னியம்மையாம் மாமி, திருவைப் படுத்திய பாட்டைக் கண்டு உருகினார் ஓர் அன்னக் காவடி. பிச்சை என்பார் அவர். "அம்மா சின்ன குழந்தையைத் திட்டாதீர்; நொந்து போகும்" என்றார்.

"பிச்சை எடுத்தேன்; போனேன்; என்றுபோ; பேசினால் உனக்குக் கிடைப்பது வேறு; பிச்சை நாய்க்குப் பேச்சைப்பார்" என்றாள். பெரியவர் திருமகளை நினைத்து நோவோடு போனார்.

பொன்னியம்மையின் பக்கத்து வீட்டுக்காரி, பூமணி என்பாள். அவள் பொன்னியம்மையைத் தேடி வந்தாள். அவளிடம் 'எனக்குப் போதாத வேளை என்று புலம்பினாள் பொன்னியம்மை, "எனக்குத் தெரிந்த சோதிடர் ஒருவர் உள்ளார். அவர் சொல்லியது சொல்லியவாறு நடக்கும். செய்வினை, பில்லி, சூனியம் இவற்றை எல்லாம் மாற்றுவார். கோள்களின் தீமையைப் பரிகாரம் செய்து போக்குவார்" என்றாள் பூமணி. 'நாளைக் குப் போகலாம்' என முடிவு செய்து கொண்டு பிரிந்தனர்.

பள்ளிக்குப் போன பொன்னியை எதிர்பார்த்து இருந்தபொன்னியம்மை அவள் வந்ததும் அவளுக்கு உண்ணவும் பருகவும் வேண்டுவ பலவும் தந்துமகிழ்ந்தாள்.

## 2. கணியக் கலக்கம்

மறுநாள் மறவாமல் பூமணி பொன்னியம்மையைத் தேடி வந்தாள். இருவரும் சோதிடரைக் காணப் புறப்பட்டனர். போகும் போதே சோதிடர் சிறப்புகளைச் சொல்லிக் கொண்டே சென்றாள் பூமணி. எவராவது வருவாரா என்று எதிர்பார்த்திருந்த சோதிடர் பூமணியும் பொன்னியம்மையும் வருதல் கண்டு மகிழ்ந்தார். வருவாய் வாய்க்கும் என்னும் உறுதியால் வீட்டின் உள்ளே போய் செய்யும் புனை கோலங்களைப் புனைந்து கொண்டு வந்து, வந்தவர்களை வீட்டுள் அழைத்தார்.

பூமணி, பொன்னியம்மை துயரை விளக்கமாக எடுத்துரைத்தாள். வழி சொல்ல வேண்டும் என்று கொண்டு வந்த பொருள்களைக் காணிக்கையாகப் பரப்பினாள். குறிபார்த்துக் கூறுதலில் தேர்ந்த சோதிடர், "பொல்லாத வேளை; சனிக்கோள் கடுமையாக உள்ளது; சாதகர் உள்ளவரை எதுவும் உருப்படியாகாது என்றார். "ஐயோ! எனக்கு ஏதாவது!" என்று புலம்பினாள் பொன்னியம்மை. "எனக்கு ஏதாவது ஆய்விட்டால் என் மகள் பொன்னி என்ன ஆவாள்?" என ஏங்கினாள்.

பூமணி தேற்றினாள். ஏதாவது பரிகாரம் செய்து தீர்க்க வேண்டினாள். பரிகாரம் செய்துதீர்க்க, பணம் நிரம்பச் செலவாகும் என்றார் சோதிடர்.

எப்படியானாலும் நல்லபடியாகத் தீர்வு வேண்டும் என்றாள் பூமணி.

செலவுமிகும் என்பது கேட்டபொன்னியம்மை பின்னால் பார்க்கலாம் வருகிறோம் என்று எழுந்தாள். தனக்குள்ளே திட்டமிட்டாள். "அன்னக் காவடிக் கிழவர், தின்னிமேல் பரிவு கொண்டுள்ளார். அவரிடம் அவளை ஒப்படைத்தால் பிச்சை எடுக்கவும், மடம் கூட்டிப் பெருக்கவும் வைத்துக் கொள்வார். பரிகாரச் செலவு இல்லாமலே பரிகாரம் செய்துவிடலாம்" என முடிவு செய்தாள். இருவரும் திரும்பி வந்தனர்.

தன் வீட்டின் முன் பிச்சைப் பெரியவர் நிற்பதையும் தெருவினர் கூடியிருப்பதையும்கண்ட பொன்னியம்மை திகைப்படைந்தாள். பிச்சைப் பெரியவர் அவளிடம், திருமகள் முற்றத்தைக்கூட்டிப் பெருக்கும் போது குப்புற விழுந்ததையும், மூக்கில் அடிபட்டு இரத்தம் கொட்டியதையும், அவளை மடத்துக்கு எடுத்துச் சென்று மருத்துவம் பார்ப்பதையும், இன்னும் மருத்துவம் செய்ய வேண்டி மடத்தில் வைத்திருப்பதையும் சொல்லி விட்டு வீட்டுத்திறவுகோல் தர வந்ததையும் கூறினார். அதிர்வில்லாமல் கேட்ட அவள் பிச்சைப் பெரியவரை, "ஐயா, வாருங்கள்" என்று வீட்டுள் அழைத்தாள். "ஆள் இல்லாத நேரத்தில் அவளைக் காப்பாற்றிய பெரியவர் நீங்கள். அவளை அங்கேயே

உங்களோடு வைத்துக் கொள்ளுங்கள். மடத்தைக் கூட்டிப் பெருக்கவும் பிச்சைக்கு உடன் வரவும் செய்துகொள்ளுங்கள்" என்றாள்.

திருமகள் துயரை ஒழிக்க உள்ளார்ந்த இரக்கத்தால் இருந்தபிச்சை, "அம்மா! உங்களுக்கு நன்றி; நீங்கள் தெய்வத் தொண்டு செய்வதற்கு வழிகாட்டுகிறீர்கள்; நான் மடத்தில் திருமகளை வைத்துக் காப்பாற்றி வேண்டுவன செய்வேன்" என்று வணங்கி விடைபெற்றுக் கொண்டு வளர்ப்புக் கூலி இவ்வளவு தரவேண்டும்என்று கேளாமல் பொன்னியம்மை திருமகளைத் தந்ததற்கு மகிழ்ந்து சென்றார்.

## 3. அமுத சுரபி

"அத்தை உங்களைப் பிச்சை என்று கூப்பிடுவார். அதுதான் உங்கள் பெயரா தாத்தா?" என்று கேட்டாள் திருமகள். பிச்சை என்னும் பெயர் உனக்குப் பிடிக்கவில்லையா? என்றார் பெரியவர்.

"அத்தை பழிக்கும் அந்தப் பெயரை விட்டு விட்டு வேறு பெயர்வைத்துக் கொள்ளக் கூடாதா?" என்றாள் திருமகள் "அந்தப் பெயரையும் பழிக்க மாட்டார் என்பது இல்லையே! பிச்சை என்பதும் பெருமை மிக்க பெயர்தான். அது முழுமுதல் இறைவன் பெயர் என்பதை நீ பின்னே அறிந்து கொள்வாய் என்றார் பெரியவர்.

"உண்ணும் உணவை ஒவ்வொருவரும் உழைப்பால் பெறுவதே முறைமை. ஆனால், இங்கே உள்ளவர்களைப் பார். கால், கை இல்லார்; கண் இல்லார் உள்ளனர். இவர்கள் என்னை நம்பியுள்ளனர். நான் ஊரை நம்பியுள்ளேன். நம்பிய ஊரை நான் ஏமாற்றாத அளவும், ஊரும் என்னை ஏமாற்றாது. எனக்காக நான் பிச்சை எடுத்தது இல்லை. எடுக்கவும் மாட்டேன்" என்றார்.

இந்த மடத்திற்கு வந்த பின்பு, இன்பமே அன்றித் துன்பம் என்பதை நான் அறியவில்லை. ஒவ்வொரு வரும் உரிமையுடன் அவரவர் கடமை செய்கின்றனர். எவர்க்குப் பொறுப்பு. எவர்க்குப் பொறுப்பில்லை என்பது தோன்றவில்லை; எவர்க்கு எவரும் உயர்வும் இல்லை; தாழ்வும் இல்லை. இங்கே வந்த பின்னரே வாழ்வு என்பது பற்றி நினைத்துப் பார்க்கிறேன். கற்பிக்காமலே கற்றுக் கொள்கிறேன். காணும் இவ்விடம் கடவுள் உறைவிடம் என உணர்கிறேன் என்றாள் திருமகள்.

"இதில் ஒரு வியப்பு இல்லை. உண்மை உணர்ந்து பார்த்தால் உரிமையாக வாழமுடியும்" என்றார். உனக்கு உடல்நிலை சரியாய்விட்டது. இனித் துயரம் உனக்கு இல்லை என்றார் பிச்சை. திருமகள் தேம்பி அழுதாள்.

"அத்தை வருவாளே; வா என்று என்னை அழைப்பாளே; தாத்தா தந்து விடுவீரா? கிணற்றில்

தள்ளினாலும் தள்ளுங்கள். அத்தையிடம் என்னைத் தருதல் வேண்டா. கொள்ளியைத் தலையில் கொண்டாலும் கொள்வேன்; அத்தை கூட இருக்கக் கொள்ளேன். உங்களுக்குச் சுமையாக நான் இருக்க மாட்டேன்; உங்களோடு பிச்சை எடுக்க வருவேன்; பற்றுத் தேய்ப்பேன்; சொன்ன வேலைகளைச் செய்வேன்; அதனால், வேற்றிடம் எதற்கும்என்னை அனுப்பிவிட வேண்டா. என் கண்கண்ட தெய்வம் நீங்களே தாம்; உங்கள் காலடி நிழலே எனக்குப் போதும்" என்றாள்.

"உனக்கு எந்தத் துயரும் வராது. உன் அத்தையும் வர மாட்டாள். வரினும் உன்னைத் தரமாட்டேன். உன்னை வளர்க்கவோ, வேண்டுவ செய்யவோ இங்கே ஒரு தடையும் இல்லை. ஆனால் உன் எதிர் கால நலம் கருதித் தகுதிமிக்க ஓரிடத்தில் உன்னைச் சேர்க்க விரும்புகிறேன்" என்றார் பெரியவர்.

"உங்களைப் பிரிய மாட்டேன்; உங்கள் உதவியை மறக்கமாட்டேன்; இங்கேயே இருப்பேன்" என மீண்டும் கூறினாள் திருமகள்.

"பொன்னி போல நீ பள்ளிக்குப் போகலாம்; அறிவால் உன்னை வளர்க்கலாம்; ஒத்த பிள்ளைக ளோடு ஒன்றாய்க் கூடி வளரலாம்; நான் சொல்லும் இடத்திற்கு நாளையே செல்லலாம்" என்றார். அமைந்து கேட்டாள் திருமகள். இரவில் அத்தை வருவது போலவும், பொன்னி புத்தகப் பையுடன்

பள்ளிக்குப் போவது போலவும், தன்னைப் பள்ளிக் குப் பிச்சைத் தாத்தா அழைத்துச் செல்வது போல வும் கனவு கண்டாள்.

விடிகாலையில் எழுந்த தாத்தா திருவாசகப் பா தேனாக இசைத்தார்; காலைக் கதிர் வரவும் கதிர் வணக்கத்துடன் மொழிவணக்கமும் இசைத்தார். திருமகள் அவ்விசைகேட்டு மகிழ்ந்தாள். இந்த இனிய இசையை இழந்து போக நேர்கிறதே என ஏங்கினாள்.

“அன்பு என்னும் ஒருபொருள் உண்டு என்பதை இங்கே வந்த பின்பே அறிவேன். இங்கே உள்ளவர் கையில்லார் காலில்லார் கண்ணில்லார் என்றாலும், அன்பில்லார் எவரும் இல்லை என்பதை உணர்ந்து கொண்டேன். ஆனால் முன்னர், கையுள்ளார் காலுள்ளார் கண்ணுள்ளார் என்றும், செய்யுள் ளார் செயலுள்ளார் என்றும் கண்டவரிடத்தும் அன்புள்ளார் என்பதைக் கண்டறியேன்; அவ்வன் பினை இழக்கவோ என்றும் ஏங்கினாள். ஆயினும் தெருவிலே வீழ்ந்து கிடந்தபோது தெய்வமாக ஓடிவந்து உதவிய பெரியவர் சொல்வழி நிற்பதே என் கடமை” என முடிவு செய்தாள்.

பெரியவர் பிச்சை திருமகளுக்கு வேண்டும் உடைகள் பொருள்கள் ஆயவற்றை எல்லாம் திட்டமிட்டு வாங்கி எடுத்துக் கொண்டு திருமக ளுடன் புறப்பட்டார். ஒளியுறு வாழ்வு உனக்கு

உண்டு என்பதுபோல் கதிரோன் கிழக்கே எழுந்தான்.

## 4. அருளகம் புகுதல்

பெரியவர் பிச்சை திருமகளை அழைத்துக் கொண்டு, பழந்தமிழ் வளமெலாம் ஒருங்கே தேங்கிக் கிடப்பது போன்ற அருளூர்க்குச் சென்றார். ஆங்கே அமைந்த அருளகத்தைக் கண்ட அளவில் மண்ணிடைப் படிந்து வணங்கினார். அவர் வணங்கியது போலவே திருமகளும் வணங் கினாள். ஆன்ம நேயப் பெருக்காக அமைந்த இடம் இது; ஆதலால் இம் மண்ணை வணங்கினேன் என்று பெரியவர் திருமகளிடம் கூறினார். எந்த மண்ணில் தக்கவர்கள் இருக்கிறார்களோ அந்த மண் தகுதிமிக்க மண் என்று ஒளவையார் கூறினார் என்பதை உரைத்தார்.

ஆங்கே அழகு அழகான மயில்களையும் மான்களையும் கண்டு திருமகள் களிப்புற்றாள். கொள்ளை வனப்பான செடிகளும் கொடிகளும் மலர்களும் உள்ளே வருக என உவந்து வரவேற்பது போல் மகிழ்ந்தாள். அமைதி மிக்க சூழ்நிலையில் இரும்பை இழுக்கும் காந்தம்போல அருளடிகள் இருக்கக் கண்டனர். பிச்சையார் தயங்கி நின்று பார்த்தார். திருமகள் அடிகளை நோக்கித்தயக்கம் இன்றி ஓடி அடிகளின் திருவடிகளில் வீழ்ந்தாள்.

அடிகள் திகைத்தவராய்அவளை எடுத்து அமர்த்தினார். பெரியவர் அதிர்ந்தார்.

பொன்னி எனக்குக் காட்டிய புத்தகத்தில் இவரைப் பார்த்துளேன். நேரில் பார்க்க முடியுமோ என நினைத்தேன். இப்பொழுது பார்த்தேன். படத்தைப் பார்த்தது கண்ட அத்தை, என்னை மொத்தினாள்; புத்தகத்தைப் பார்த்தாயோ என்று கன்னத்தில் குத்தினாள். ஆதலால் நான் மறக்கவே இல்லை, பொன்னி சொன்ன விவேகானந்தர் தாமே நீங்கள் என்றாள் திருமகள். பெரியவர் இன்புக் கண்ணீர் வடித்தார். விவேகானந்தர் பெயரால் தொண்டு செய்பவன்யான். அவரல்லேன்; வீறு மிக்க இந்தத் தோற்றம் பார்! பெருமிதமாக நடையிடும் இப்படம் பார்! ஆளும் அரசாகத் திகழும் அருமைப்படம்பார்! துறவின் தூய்மை துலக்கும் இத் தோற்றம் பார்! எழுச்சிமிக்க எழிலை இதோ பார்! என விவேகானந்தரின் படங்களை ஒவ்வொன்றாகத் திருமகளுக்குக் காட்டினார் அருளடிகள்.

திருமகளை அங்கு அழைத்துக் கொண்டு வந்த நோக்கத்தைப் பெரியவர் உரைத்தார். முழுமையான ஒப்படைப்பாகக் கொள்ள வேண்டினார். தெய்வத் திருவருள் கொடையே ஈதென ஏற்ற அருளடிகள் பெரியவரையும் அங்கே தங்குமாறு கூறினார். ஆனால் அவரை நம்பி இருப்பவர் நிலைமையைச்

சொல்லி விடை பெற்றார். திருமகள் உள்ளம் கசிந்து அழுதாள்; பெரியவர் உருகினார். அடிகளார் திருமகள் கண்ணீர் துடைத்துத் தேற்றினார்.

## 5. திருமகள் கலைமகள்

விடியு முன்னர்த் திருமகள் எழுந்தாள். குளிர்ந்த நீரில் நீராடினாள். கூந்தலை முடித்து உடை உடுத்து, அருளகம் சென்றாள். அமைந்த கோலத்து அடிகளைக் கண்டு வழிபட்டாள். பெரியவர்பாடிய வாசகப் பாடலை உருக உருகப் பாடினாள். தேடரிய திருவெல்லாம் தேடி அடைந்த திருவே தம்மைத் தேடி அடைந்ததாக மகிழ்ந்தார்.

மண்ணிலே நெளியும் புழுவென இருந்த வாழ்வு, விண்ணிலே பறக்கும் வெண்புறா வாழ்வாக விளங்கப் போதலைக் காட்டுவதுபோல வெண்ணிற உடையில் ஆயா ஒருவர் வந்து திருமகளை அழைத்துச் சென்றார். சிட்டுக் குருவிகளா, தத்து கிள்ளைகளா, வெண் புறாக்களா, மகிழ்வுறு மயில்களா, தாமரைப் பொய்கையா, முல்லைப் பந்தலா யாழும் குழலும் அமிழ்தும் தேனும் நடமிடலா என்னுமாறு தொகுதி தொகுதியாக நடந்துவரும் சிறுமியரைக் கண்டு "இன்ப நிலைக்களம் ஈதே" என்று மகிழ்ந்தாள்.

ஆர்வத்தால் கற்றாள்; ஆடல் பாடல் விளையாட்டு வேலை வழிபாடு தூய்மை பேணல் ஆய

வற்றில் எல்லாம் அக்கறை கொண்டாள். பள்ளிக் கல்வியொடு யான் கற்க வேண்டுவ எவை என அருளடிகளிடம்கேட்டாள் திருமகள்.

அடிகள், திருவாசகம், திருவள்ளுவம், விவேகா னந்தம், அருட்பா, தாயுமானம் ஆகியவற்றையும், அருளியல் அறிவியல் பொறியியல் பொருளியல் ஓவியம் இசை கூத்து எனத் துறைநூல்கள், கலை நூல்கள் ஆயவற்றையும் காட்டி இவற்றையெல்லாம் வாய்த்த வாய்த்த போதுகளில் கற்கலாம் என்றார்.

இத்தனை நூல்களா? எத்தனைபேர்க்கு இவற்றைக் கற்க வாய்க்கும் என்று வியந்த திருமகள் "ஒன்றிப் புகுந்தனள்; ஒட்டிய தூசி துடைத்தனள்; நூல்களைத் துலக்கினள்; அமுதம் படைத்ததாய்க் கொண்டனள் பயின்றனள் பெரிதே" அருளகம் வந்தபின் உனக்குக் குறையெதுவும் உண்டோ என்று அருளடிகள் திருமகளை வினாவினார்.

"குறைகளா சில உள" என்ற திருமகள், "குட்டுதல், திட்டுதல் தின்னி என்னப் பழித்தல் கன்னத்தில் அறைதல் இல்லை. கண்ணிமைப் பொழுதும்தங் களைப் பிரியாமல் நிற்க எனக்கு வழிகாட்டிய பிச்சைப் பெரியவர் தம்மை அடிக்கடி காண வாய்ப்பதில்லை. இவையே எனக்குள்ள குறை" என்றாள் திருமகள்.

பேசி வைத்ததுபோல் பிச்சையார் எய்தினார். ஓடித் தழுவிய திருமகள், "தாத்தா என்னைப்

பிரியாமல் இங்கே தங்குவீரோ" என இருவரும் உருகிய காட்சி அருளடிகளை உருக்கி, ஆன்ம நேயப் பெருக்காய் நின்றது.

## 6. அருள் நிறை இருவர்

திருமகள் மனத்துயர் அறிந்த பிச்சையார், "உயிர் வளர்க்கும் அரிசி அப்படியே பயிரில் இருந்து கிடைத்துவிட்டதா? அறுத்தது, அடித்தது, மிதித்தது, தூற்றியது, காயவிட்டது, அவித்தது, இடித்தது, அரைத்தது, புடைத்தது, வேக வைத்தது ஆகிய இவற்றின் பின்னாக அல்லவோ சோறாகவும் சிற்றுண்டிகள் ஆகவும் அமைகின்றது. வாழ்க்கை யில் துயரப்படாமல் எவருக்கும் முன்னேற்றம் இல்லை; மேம்பாடும் இல்லை.

உருக்கு நோய் என ஒரு நோய் உண்டு; அந் நோயிலும் உருக்குநோய், பிரிவே ஆகும். பிரிவில் உருகும் உள்ளம் உருக்காக உறுதியும் பெற்றால் தான் உணர்வடைய முடியும். ஆதலால் பிரிவுத் துயரை மறந்து படிப்பிலும், தொண்டிலும் முழுமையாக ஈடுபடு" என்றார்.

திருமகளும் பெரியவரும் உணவகம் சென்றனர். உண்டனர்; திருமகள் தங்கும் விடுதிக்குச் சென்றாள். பெரியவர் அருளடிகளுடன் தங்கினார். அடிக ளிடம் பெரியவர் தம் பழ வரலாற்றை உரைத்தார்.

இணையில்லா நட்புக்கு உரியவர் என விளங்கிய சீனக்கர்-பொய்யா மொழியார் ஆகியவர்தம் கண்டியூர் சார்த்ததோர் மடத்தில் தோட்டத் தொழிலும், பூ எடுத்துத் தொடுத்துத் தரும் தொண்டும் செய்தவர் பெரியவர் பிச்சை. அவர் பயிர்களை உயிர்களாக மதித்து வளர்த்தார். தொழிலைத் தொண்டாகக் கொண்டு ஆர்வத்தால் பணி செய்தார். வேலை செய்யும் போதில் தாம் மனப்பாடம் செய்திருந்த திருவாசகம், தேவாரம், திருவருட்பா, தாயுமானவர் பாடல்களை இசை யொடு பாடுவார். இதனைக் கேட்ட அன்பினர், அப்பாடல்களை ஒடுக்கத்தில் அமர்ந்து ஓய்வான வேளைகளில் பாட வேண்டினர். பெரியவரும் அவ்வாறே விரும்பிப் பாடினார். அவர் பாடலைக் கேட்கவே ஒடுக்கத்தில் கூட்டம் பெருகியது. ஊரவர் உள்ளங்களில் பெரியவர் இசை குடிகொண்டது. கூட்டம் பெருகுதலும், தங்களை ஊர்ரவர் முன்போல் மதித்துப் போற்றாமையும் எண்ணிப் பொறாமை கொண்டனர் அருச்சகரும் ஓதுவாரும். இருவரும் கூடிப் பேசினர். ஒடுக்கத்தின் பரம்பரை அறங்காவலரை வசப் படுத்தி, ஒடுக்கத்தையே தம் உடைமையாக்க உள்ளெண்ணம் கொண்டு பிச்சை முனைப்பாகச் செயல் படுவதாகக் கூறினர். இப்பொழுது விட்டோம்; கெட்டோம்; உங்கள் மேல் உள்ள நல்ல எண்ணத்தால் இதனைக் கூறினோம்; இனி உங்கள்பாடு என்றனர்.

அறங்காவலர் அதிர்ந்தார். ஒடுக்கத்தைத் தம்மை விட்டுப்போகாமல் காக்க, பிச்சையை ஊரைவிட்டு ஓட்டுவதே வழி எனத் தெளிந்தார். மூவரும் பொழுது விடியு முன்னரே பூந்தோட்டம் சென்று மறைவாக இருந்தனர். பிச்சை வழக்கம் போல் மலர்பறித்தார். மாலைதொடுத்தார். இயல்பாகப் பாடுவதுபோல் திருவாசகத்தை உருக்கமாகப் பாடினார். அவர் அப்பொழுது பாடிய பாடல்;

> "முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
> பத்திநெறி அறிவித்துப் பழவினைகள்
> பாறுவண்ணம்
> சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
> அத்தனெனக் கருளியவா றார்பெறுவார்
> அச்சோவே"

என்பதாகும்.

கண்ணீர் வழிய பல்கால் இப்பாடலைப் பிச்சை பாடியது கேட்ட மூவரும் நேரே சென்றனர். எங்களைப் பழித்துத் தானே பாடினீர் என்று சீறினர். மாணிக்க வாசகர் பாடியதைப் பாடியதே உங்களைப் பழிப்பதாகக் கொண்டால் உங்கள் எண்ணம் என்ன என்பது எனக்குத் தெளிவாகப் புலப்படுகிறது. வேலையை விட்டு வெளியே போ என்று நீங்கள் சொல்வதற்குமுன் நானே வேலையை விட்டுப் போகிறேன் என்று சொல்லி விட்டுக் காவிரித்தென்கரை வழியே மேற்குநோக்கி நடந்தார் பிச்சை. அது கருவூர்ச்சாலை. வழியில் திருவளர்குடி

என்னும் பெயருடைய அல்லூரை அடைந்தார். அவ்வூர்க் கிழக்கு எல்லையில் இருந்த இளங்குடி அம்மை கோயிலை நெருங்கினார். சற்றே ஓய்வு கொண்டு மேலே நடக்கலாம் என எண்ணிக் கோயிலுள் புகுந்தார்.

கோயிலுக்குள் பார்வை இல்லாத ஒருவர் இருந்தார். அவர்முன் அன்னக் காவடி ஒன்று இருந்தது. அதில் இருந்தசோற்றை ஒரு நாய் தின்றது. அதனை அறியவும் இயலாத பார்வை இல்லாதவர் பசித்துயரை நினைத்தார். பிச்சை. பரிந்து உருகினார். நேரே காவிரி ஆற்றுள் இறங்கி நீராடினார்; அம்மை கோயிலில் வழிபாடு செய்தார். எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணுவார்க்குத் திருத்தொண்டு செய்தல் தம்கடன் என ஏற்று, அன்னக் காவடியைத் தூக்கினார். வள்ளலார் பாடல் முதலாக தேவாரப் பாடல்கள் பாடிக்கொண்டே தெருவில் சென்றார்.

இசையொடு பாடிக் கொண்டு பிச்சை ஏற்றது கேட்டவர்கள் புதுமையாக நோக்கினர். சோறு போட்டனர். அதனைக் கொண்டு அங்கிருந்த பார்வை இல்லாரையும் அவரைச் சார்ந்து இருந்த கால், கை முடவர்களையும் காக்கும் கடமையைத் தொடர்ந்து பிச்சை மேற்கொண்டார். அவ்வாறு செய்யும் தொண்டின் இடையே தான் திருமகனைக் கண்டதும், அவள் துயர் மாற்றும் முயற்சி மேற்கொண்டதுமாம் நிகழ்வுகளாம். இவற்றை

யெல்லாம் அருளடிகளாரிடம் பிச்சையார் உரைத்தார். பொழுது விடியுமுன் தமக்குள்ள கடமையை நினைந்து அடிகளிடம் விடைபெற்றுச் சென்றார்.

## 7. தீதும் நன்றாம்

விடிபொழுதில் பிச்சையாரைத் தேடிவந்தாள் திருமகள். அதற்கு முன்னரே அவர் விடைபெற்றுச் சென்றதை அறிந்தாள். "பிரிந்தார் வருவார்; அவரவர் கடமை புரிதல் கட்டாயம்; இதனைப் புரிந்தார் தெளிவுடையவர்" என்பதை அடிகள் அருளினார். வழக்கமாகப் பாடும் இறைவாழ்த்தும், கதிர் வாழ்த்தும் அன்று திருமகள் பாடாமையைச் சுட்டிக் காட்டிய அடிகள், கவலையால் கடமை தவற நேர்தலைக் குறிப்பாக உணர்த்தித் தெளிவித்தார்.

கல்வியிலும் தொண்டிலும் திருமகள் சிறந்து வளர்ந்தாள். அப்பரடிகள் அவளுள் அமைவாகி இருப்பது போலத் தூய்மைப்பணிகளிலும் வழிபாட்டிலும் ஒன்றி உறைந்தாள். நூலகத்தை நன்கு பயன்படுத்தினாள். அடிகள் நிழலே என்னச் செய்யும் பணிகள் செய்தாள். வானம் பார்த்து நின்ற வளர் பயிர்க்கு வளமழைபெய்தது போன்ற அடிகள் அருட்பெருக்கால் பலரும் பாராட்டும் திறங்கள் அமைந்தாள்.

இவளைப் பெற்றவள் அருகில் இருந்தால் சொக்கிப் போக மாட்டாளா? தந்தை இருந்தால்

பூரிப்படைய மாட்டாரா? உடன் பிறந்தார் ஒருவர் இருந்தால் உவகை ஊற்றாக மாட்டாரா? சிறந்த தோழி ஒருத்தி இருந்தால் தலையில் தூக்கிக் கொண் டாட மாட்டாளா? என்று பலரும் பாராட்டத் திருமகள் சிறந்தாள்.

திருமகள் அடையும் திறம், சிறப்பு, பாராட்டு எல்லாமும் அவளோடு பயின்ற பாவை என்பா ளுக்கு எரிச்சல் உண்டாக்கியது. செல்வ வாய்ப்பு மிக்க அவளைச் சுற்றியும் சூழ்ந்தும் இருந்தவர்கள், அவளை விட்டுப் பிரிந்து திருமகளுக்கு நட்பாகினர். இதுவரை அவர்கள் தன்னிடம் நட்பாக இருந்தது உண்மை இல்லை. செல்வத்தைக் கருதிச் சேர்ந்து இருந்ததே என எண்ணிய பாவைக்குத் திருமகள் மேல் பொறாமை தீயாக வளர்ந்தது. இந்நிலையில் உயிர்த்தோழி என அவள் நம்பியிருந்த ஒன்றிரண்டு பேர்களும் அவளை விட்டு நீங்கித் திருமகளைத் தொடுத்தனர். அதனால் திருமகளை ஒழித்தால் அல்லாமல் தன் பழைய செல்வாக்கை மீட்டெடுக்க முடியாது எனக் கருதிய பாவை செவியில் சில பாடல்கள் விழுந்தன.

"ஆடல் வல்ல மயிலே நீ!
பாடல் வல்லாய் அல்லை நீ!
பாடல் வல்ல குயிலே நீ!
ஆடல் வல்லாய் அல்லை நீ!"

"ஆடல் பாடல் அல்லாமல்
சொல்லல் சுவைத்தல் எல்லாமும்
கூடல் அமைந்தாய் திருவே நீ
கொடையாய் அமைந்தாய் எங்களுக்கே"

என்பன போன்ற பாராட்டுப் பாடல்களைக் கேட்டுத் தலைநாணிக் கொண்டு வந்த திருமகளைப் பாவை கண்டு, அவளைத் தழுவுவது போல் தழுவிச் சங்கைப் பிடித்து நெரித்தாள். கண் பிதுங்கியது; தலை சுற்றியது; வெறிகொண்டு பாவை செய்யும் கொடுமையைக் கண்டதும் ஓடிவந்து சிலர் திரு மகளைக் காத்தனர். உடனே மருத்துவரை அழைத் தனர். மயங்கிக் கிடந்த திருமகளுக்காகத் தோழியர் ஆசிரியர்கள் அடிகள் ஆகிய அனைவரும் கூடினர். மணிக் கணக்காகப் போராடி மருத்துவர்கள் செய்த அரிய பணியால் திருமகளின் கண்பாவை அசைந் தது. உதடுகளும் அசைந்தன. "பாவையை ஒன்றும் செய்துவிடாதீர்; அவளுக்கு எத்துயரும் ஆக்காதீர்" என்றாள்.

துன்பம் செய்த அவளுக்கும் இன்பமே எண்ணும் இவள் இயல்பு என்ன! இவள்மேல் அவளுக்கேன் இக் கெட்டகுணம்! இதனை வளர விட்டால் வருங்காலம் என்ன ஆகும்! நலம் பெற்றபின் தக்க வகையால் கேட்டுக், குறை களைய வேண்டும் என்று அருளடிகள் எண்ணினார்.

திருமகள் கண்ணை விழித்ததும், "பாவைக்கு எத்துயரும் நேர்தல் ஆகாது" என்று கூறியதைக்

கேட்டாள் பாவை. "யான் செய்த கொடுமையை மறந்து, எனக்கு எத்துயரும் நேரக் கூடாது என எண்ணிய திருமகள் பெருமை என்ன, என் சிறுமை என்ன என நினைந்தாள். அந்நினைவு அவளைப் படிப்படியே வாட்டியது." "திருமகளைக் கண்டு பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டுவேன்" என்று முடிவு செய்து மருத்துவமனைக்கு வந்தாள். தன் செயலுக்கு வருந்திக் கண்ணீர் வடித்தாள்.

திருமகளும் கண்ணீர் வழிதலானாள். தீமை, தீமையை அழித்து நன்மையும் ஆக்கும் என்பதை இருவர் கண்ணீரும் வெளிப்படுத்தியது. பாவையின் பெற்றோர், திருவே இவள் எங்கள் சொல்லைக் கேட்டது இல்லை; மதித்து ஏற்றதும் இல்லை. இப்படித் தீயவளாய் உள்ளாளே என நாங்கள் வருந்தினோம். இவளைப் புதுப் பிறப்பாக்கிய பெற்றவள் நீ. இளம்பருவத்திலேயே தீய பிறப்பைத் தூய பிறப்பாக்கி விட்ட பெருமைக்குரிய தாய் நீ என்று பாராட்டினர். "சித்தம் திருந்துதல் செத்துப் பிறத்தல்" எனத் திரு. வி. க. எழுதியதையும், வித்தின் தன்மை அமைந்தவர் தம்மைப் போல் பல்லாயிரம் பேரை உருவாக்குகின்றனர் என்று திருவள்ளுவர் கூறியதையும் நீ உன் வாழ்வால் தெளிவுபடுத்தியுள்ளாய் என்றனர்.

பாவை அருளகம் சென்று அருளடிகளைக் கண்டு வணங்கினாள். தன் பிழையைப் பொறுத்துக் கொள்ள வேண்டினாள். தான் செருக்காக நின்ற

சிறுமையையும் சீறிச்செய்த செயலையும் எடுத் துரைத்தாள். என்னால் மாண்ட நிலை அடைந்த திருமகள் மாயாமல் மீண்டது போல, அவள் பெருங்குணத்தால், சிறுமைப் பிறப்பாகிய யான் புதுப்பிறப்பாகி யுள்ளேன் என்று கண்ணீர் வடித்தாள்.

"கரையும் அழுகை போலாகக்
கழுவாய் ஒன்றும் இலையென்றே
கரையும் தண்ணந் தமிழ்மறையும்"

என்று அடிகள் தேற்றினார். இறைவனே கழுவாய் வழங்கியதாக எண்ணிய பாவை திருமகளை மீண்டும் அடைந்தாள்.

இனி இவளை விட்டு நீங்கமாட்டேன். வீடு, சுற்றம் என்பவை இனி எனக்குச் சிறைச்சாலை போன்றவை. திருமகளோடு யானும் அருளகத்தை அடைக்கலம் கொண்டேன். திருவோடு கற்பேன்; தொண்டு புரிவேன்; அற்பப்பொருளாம் செல்வத் தால் அன்புப் பொருளாம் பெரும் பொருளை அடைவேன் என உறுதிகொண்டாள்.

திருமகளும் பாவையும் உருவும் நிழலும் போலப் பிரிவில்லாத உரிமையன்பு கொண்டனர். 'திருப் பாவை' என்று இணைத்துச் சொல்லுமாறு விளங்கினர்.

அருளடிகள் நிறுவிய முதியர் இல்லத்தைப் பேணும் பொறுப்பைத் திருமகள் ஏற்றாள்.

இளையவர் இல்லமாகிய களிக் கூடத்தைப் பேணும் பொறுப்பைப் பாவை ஏற்றாள். இருவரும் தங்கள் பணியில் இனிமையும் நிறைவும் கொண்டனர். இந்நிலையில்,

*"தெய்வக் குழந்தை முன்னிளமை;*
*தேர்ந்த முதுமை பின்னிளமை"*

ஆகிய இவ்விரண்டு இளமைகளையும் இணைத்தலால் ஏற்படும் நலங்களை அடிகளுடன் அமைந்து எண்ணினர்.

*"இளமை எழுச்சி கிளர்ச்சியெலாம்;*
*எய்தும் முதுமை இனிப்பெய்தும்;*
*வளமை வாழ்வு பேரறிவு*
*வாய்த்த முதுமை அரவணைப்பால்,*
*தளிர்க்கும் இளமை; இருவகையும்*
*தக்க நலமாம்"*

என முடிவு செய்தனர். நாட்டின் நலத்திற்கு மூலமாகிய இளமையும் முதுமையும் ஒன்றுபட்டு இன்பமாக வாழ வழிகண்டனர். அதே பொழுதில் மகளிர் கல்வி, தொழில், தொண்டு, உரிமை ஆகியவற்றால் முன்னேறினால் அல்லாமல் நாடுமுன்னேற முடியாது எனவும் தெளிந்தனர்.

இந்நிலையில் பிச்சைப் பெரியவர் பேணிவரும் முதியவர்களோடு இங்கேயே வந்து இணைந்து முதியர் இளையர் இல்லங்களைப் பேணும் பொறுப்பை எடுத்துக் கொண்டால், பாவையும் திருமகளும் முழுமையாக மகளிர் ஆக்கப்பணிகளில்

ஈடுபடலாம் என்னும் எண்ணம் கொண்டனர். அழுத்தமான எண்ணங்கள் ஒன்றுபட்டு ஆக்கமாம் என்பதுபோல் பிச்சைப் பெரியவர் மறுநாளே அருளகத்திற்கு வந்தார்.

பிச்சைப் பெரியவரை முன்னர் அறியாள் பாவை எனத் திருமகளும் அருளடிகளும் எண்ணியிருக்க, அவளே முன்னர் ஓடிப்பிச்சையாரைப் பற்றினாள்; தாடியைத் தடவினாள். திருமகள் வியந்தாள்; அடிகள் திகைப்படைந்தார்.

திருமகளின்மேல் பொறாமையும் சீற்றமும் பெருகி இருந்த நாளில், பிச்சையும் திருவும் நடந்து பேசிக்கொண்டு போவதைப் பார்த்திருக்கிறாள் பாவை. அவரே திருமகளை அருளகத்தில் சேர்த்த வர் என்பதையும் அறிந்திருக்கிறாள். "எனக்குப் பகையை இங்கே கொண்டு வைத்த இக்கிழவர் எனக்குப் பகையானவர். எனக்கு வாய்ப்புக் கிடைத் தால் இவர் தாடியைப் பிடித்து நார் நாராகக் கிழிப்பேன்" என எண்ணி இருந்தாள். இப்போது அவள் புதுப் பிறப்பாகி விட்டமையால் அவரிடம்,

> "அன்று பழித்த அப் பாவை
> அடியோ டழிந்தாள்; இப்பாவை
> இன்று பிறந்தாள்; இத்திருவே
> இனிய ஈன்றாள்"

எனச் சொன்னாள். தாடியைத் தடவித் தாத்தாவை மயக்கி விட்டாய் என்றாள் திருமகள். அடிகள் முறுவலித்தார். அப்பொழுது பாவை,

"முயலுக்குக் கால்கள் மூன்று இல்லை; நான்கு என்பதைத் தாதாவும் நன்கு அறிவார். ஆதலால் நம் மூவரொடு அவரும் இணைந்து தாவும் முயலாகக் கடமை புரிய வேண்டும். தாதா தட்டாமல் அருள கத்தை அடைந்து விடவேண்டும். அது என் ஆவல்" என்றாள். "எங்கள் விரும்பமும் அதுவே என்றார் அடிகள். பெரியவர் பிச்சை இசைந்தார்.

## 8. முதுமையும் இளமையும்

பிச்சைப் பெரியவர் அருளகம் வருவதற்கு இசைவு தந்தமை மூவருக்கும் இன்பமாயது. திருவே என்னைத் திருத்தொண்டுக்கு ஆளாக்கிய பெரியவர் - பார்வை இல்லாத பெரியவர் - இயற்கை எய்தி விட்டார் என்பதை உனக்குச் சொல்லவில்லை. ஆங்கே இருக்கும் இருவரொடு நாங்கள் மூவராக இங்கே வருவோம் என்று கூறினார். அவ்வாறே அவர்களை அழைத்துக் கொண்டு அருளூர்க்கு வந்து சேர்ந்தார்.

பெரியவர் பிச்சை வருகை பிஞ்சுக் குழந்தை களுக்கும் மூத்த பெரியவர்களுக்கும் ஒருமொத்த இன்பமாயது. முதுமை யுற்ற அவர் - முதுமையைத் தூக்கி எறிந்த இளைஞராகத் திகழ்ந்தார். அவர் தம் இசை இன்பம் அருளக வளாகத்தைத் தேன் வெள்ளப் பெருக்காக ஆக்கியது. அதற்குமுன் நமக்கு மூப்பாகி விட்டது; இனி நம்மாள் என்ன

செய்யமுடியும் என்று ஓய்ந்து கிடந்தவர்களும் கிளர்ச்சி கொண்டனர்.

எங்களுக்கு மூத்தவர் இப்பிச்சை. இவர் காட்டும் எழுச்சியைப் பார்க்கப் பூரிப்பாக உள்ளது.

"வீசி நடப்போம்; அடைந்த கதிர்
வீறி எழும்பல் போலாக;
பேசி எழுவோம்; கடன் முடித்துப்
பெருக்கல் அள்ளல் நீர்விடுதல்
தூசி தட்டல் துணி தோய்த்தல்
தோட்டம் பார்த்தல் பூப்பறித்தல்
நேசித் திவற்றைப் புரிந்திடுவோம்;
நேற்றை வரைக்கும் இவையெல்லாம்,"
"எங்கே முடங்கி எங்களுக்குள்
இருந்த தென்ன யாமறியோம்
இங்கே பெரியர் பிச்சையிவர்
ஏற்றார் பொறுப்பை அதன்பின்னர்த்
தங்கா வேட்கை தாவியெமைத்
தட்டி எழுப்பி இவ்வண்ணம்
மங்கா இளமைக் கிருப்பாக்கி
மலரச் செய்த துணர்கின்றோம்"

என்று தங்கள் மகிழ்வை முதியவர்கள் வெளிப்படுத்தினர்.

இன்னது செய்ய வேண்டும் என்று பிச்சைப் பெரியவர் எதுவும் சொல்லார். எங்களுக்கு வாய்த்த

இனிய "மௌன குருவர்" இப் பிச்சை எனப் பாராட்டினர்.

குழந்தைகளுக்குப் பிச்சை, ஆடிப்பாடிக் கதை சொல்வார். அவர் தம் கையை அன்றிக் கைவிரல்கள் ஐந்தினையும் ஐந்து குழந்தைகள் பற்றிக் கொண்டு நடையிடுங்கால் அவர் தலையைக் கண்டு கொள்ள இயலாமல் இவர்தாம் 'அறுமுக முருகன்' எனத் தோற்றம் தந்தார். அருளடிகள் திருமகள் பாவை ஆகிய மூவரும் எதனை நினைந்து நாம் பெரியவரை இங்கு நம்மோடு இணைத்தோமோ அப்பயன் வாய்த்ததென மகிழ்ந்தனர். நம்மூவராலும் செய்ய முடியாததை இவர் செய்து காட்டும் அருமை, இத் தொண்டுக் கெனவே பிறந்த பிறவிப் பேற்றை வெளிப்படுத்தும் என நயந்தனர். அவர் இளையரை யும் முதியரையும் மகிழ்வாகப் பேணிக் கொண்ட தால் பாவையும் திருமகளும் மகளிர்க்குச் செய்யத் தக்க தொண்டில் முழுமையாக ஈடுபட வாய்த்தது.

## 9. நச்சு வளையம்

பாவை செல்வக்குடும்பத்தில் பிறந்தவள். அவளுக்குத் தகப்பேசியும் உறவாடியும் அவள் உதவிபெற்று வாழ்ந்தவர் பலர். அவர்களுக்குப் பாவை துறவுமடம் சார்ந்து இருப்பது பிடிக்க வில்லை. தங்கள் வாய்ப்புக்குத் தடையாக உள்ளது அது என எண்ணினர். அதனால் அவளை அங்கி

ருந்து மீட்டும் அவள் வீட்டுக்கே வரச் செய்யவும் இல்வாழ்வு ஏற்கச் செய்யவும் திட்டம் தீட்டினர்.

பாவையின் அத்தைமகன் எழிலன் என்பவன் இருந்தான். அவன் பாவையை விரும்பியும் அவள் விரும்பமாட்டாள் என ஒதுங்கியிருந்தாள். அவன் வழியாகத் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குச் சூழ்ச்சியாளர்கள் முனைந்தனர்.

பாவை எழிலனை விரும்பி இருப்பதாகவும், அதனை எழிலன் அறிந்து கொள்ளாமல் இருக்கி றான் என்பதாகவும் தான் இருக்கும் துறவு நிலையம் தன் கருத்தை வெளிப்படுத்திச் சொல்ல ஏற்றதாக இல்லை என்பதாகவும் அங்கே இருக்கும் திருமகள் போல யானும் துறவியில்லை என்பதாகவும் எழிலனைக் காண விரும்பி யிருப்பதாகவும் அவளைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாம் கருத்துகளைப் பரப்பி விட்டனர். உரிமை யுடைய எழிலனை உறவினர் இவ்வகையால் உசுப்பிவிட்டு விட்டனர்.

எழிலன் தன் அறியாமைக்கு வருந்தியவனாகத் தன் ஆர்வத்தைக் காட்டுவான் போல அருளகத்தை அடைந்தான். பாவை போய் வரும் வழியில் அவள் கண்ணில்படுமாறு நின்றான். அவளைப் பார்க்கவே நிற்பதாகக் குறிப்பாகக் காட்டவுமானான். ஆனால் கண்டு கொள்ள வில்லை. வழியில் நின்ற எழிலனைக் கண்டு நீ முதியர் இல்லத்தில் சேரத்தக்கவனாகவும்

இல்லை; எந்த முதியவரையோ காணவந்தவனாக வும் தோன்றவில்லை. இது முதியர் இல்லம் என்பதை முகப்பிலே இருக்கும் பலகையே காட்டும். பின்னும் ஏன் இங்கே நிற்கிறாய். ஏதாவது கேட்டுத் தெரிய வேண்டுமானால் இதோ இவ்வழியே போ! அங்கே அருளடிகள் உள்ளார்; உனக்கு ஆவன செய்வார் என்றாள்.

எழிலன், உன்னைப் பார்க்கவே நான் வந்தேன். உன்னை விரும்பி மணக்க வந்த என்னை இப்படி ஒதுக்கலாமா? என்றான்.

அப்படியா செய்தி! என்னிடமே நீ நேரில் கேட்க வந்தது நல்லதாயிற்று. மணந்த ஒருத்தியை மணம் பேசவரும் வழக்கம் இல்லை அல்லவா! நான் மணந்து கொண்டவள்; மணவாளனைக் காட்ட வேண்டுமா? வா என அழைத்துக் கொண்டு அருளடிகள் முன்போய் நின்றாள்.

திருமகள் எங்கே உள்ளாள்; அவளை இவர்க்குக் காட்ட வேண்டும் என்றாள். பாடும் பறவை அவள். எங்கும் இருப்பாள். ஆனால் உன்னைப் பார்த்து விட்டால் எங்கிருந்தாலும் ஓடிவந்து நிற்பாளே என்றார் அடிகள்.

பாவை எழிலனை அழைத்துக்கொண்டு சென் றாள். திரு, வழிபாட்டுக் கூடத்தின் வனப்புறுத்தல் பணியில் ஊன்றியிருந்தாள். பாவையைக் கண்ட தும் ஓடிவந்தாள். "திருவே நம் உறவை இவர்க்குக் கூறு" என்றாள்.

*எனைமணந்தாள் இப்பாவை*
*எனைப்பிரியாப் பாவையவள்*
*தனை மணந்தேன் யானானேன்;*
*தடியுடல மணமில்லை*
*நனையரும்புத் தேனாய*
*நற்றொண்டு நாயகனார்*
*தனைமணந்தோம் இருவருமே!*
*தவ அடிகள் திருவருளால்*

என்றாள். தொண்டை மணந்தார் கொண்ட இன்ப நிலையை எச் சொல்லால் சொல்வது? அருந்தும் நா அறியும் சுவையை அகப்பை அறியுமோ? என்றாள்.

எழிலன் தலைநாணினான். பிறர் ஏவி விட்டதை எண்ணி நொந்தான்.

*"இட்டுரைத்தார் சொற்கேட்டேன்*
*இயல்கெட்டேன்; விதை நெல்லாய்*
*இட்டுவைத்த விளை நெல்லை*
*இடித்துண்ண விழைந்தேனே!"*

என வருந்தினான். அவன் கவலையைத் திருமகள் மாற்றினாள்.

*எங்கள் பெற்றோர் எங்களைப் பெற்றார்.*
*அவர்கள் பெற்ற பேறு பெரும் பேறு!*
*நாங்கள் பெறாமல் பெற்றுப் பேணுகின்ற*
*பிள்ளைகளை நீபார்!*

முருகன் எம்பிள்ளை; கண்ணன் எம்பிள்ளை; அருகன் புத்தன் ஏசு நபி இவரெல்லாம் எம்பிள்ளை. ஆண்டாளார் எம் பிள்ளை; ஔவையும் அப்ப

டியே எம்பிள்ளை; கண்ணகியா மணிமேகலையா இவரெல்லாம் எம்பிள்ளை; மக்களை எல்லாம் தம் மகவாகக் கருதி வாழும் அன்னையர் தாமும் எம் பிள்ளை! இப்பேறு எவர்க்கு வாய்க்கும் என்றாள்.

*"சரியாக உணராத*
*சால்பற்ற எளியேற்குப்*
*பிரியாத குருவானீர்*
*பிழைபொறுக்க வேண்டும்"*

என்று பிரியாமல் பிரிதலானான். இவ்வருள் நிலையத்திற்குத் தக்கானாகி ஒருநாள் வரவாய்க் காதா! என எண்ணிக் கொண்டு நடந்தான்.

## 10. தொழிலக ஆக்கம்

விரும்பும் வாய்ப்புகளை யெல்லாம் அடைய லாம் என்று எண்ணி, எழிலனைப் பாவையிடம் விடுத்தவர்கள் அவன் திரும்பிய நிலை கண்டு துள்ளித் துடித்தனர். துறவுமடத் தொடர்பு பாவைக்கு உள்ளமட்டும் நமக்கு உதவமாட்டாள்; நாம் வேறுவழிதான் காணவேண்டும் என எண்ணினர்.

மகளிர் மேம்பாடு கருதிய ஆய்வுக் கூட்டம் நிகழ்ந்தது. திருமகள் மேடை ஏறினாள். வரவேற் றாள்; அருளடிகள் வாழ்த்துரைக்கவும் பிச்சையார் இறைவணக்கம் பாடவும் பாவை நன்றி கூறவும் மேடை ஏறினர்.

மண்ணுலகதிலே என்று தொடங்கும் வள்ளலார் பாடலைப் பிச்சையார் இசைத்தார்.

"பெண்ணின் முன்னேற்றமே மண்ணின் முன்னேற்றம்; பெண்கள் கல்வியில் சிறப்படைவதோடு, தொழில் தேர்ச்சியிலும் உயர்ந்து நிற்க வேண்டும் என்பதற்காக நிறுவப்பட்ட தொழிலக வெற்றி, மகளிர் கையிலேயே உள்ளது" என்றும், "பெண்ணைப் பெண்ணே மதியாமல் சிறுமைப் படுத்துதல் கட்டாயம் நீக்கப்படவேண்டும்" என்றும் திருமகள் கூறினாள்.

"மகளிர்க் காகவே அமைக்கப்படும் தொழிலக உழைப்பும் பொறுப்பும் மகளிரையே சாரும் நம் நோக்கமெல்லாம் நமக்கு வேண்டுவனவற்றை நாமே தேடிக் கொள்ள வேண்டும் என்னும் உறுதிப் பாட்டில் தொடங்குவதேயாகும். நாம் உறுதிப் பிடியாக உழைக்கத் துணிந்தால் தெய்வமே நம் கையைப் பற்றிப் பிடித்துக் கொண்டு முன்னாகச் செல்லும் என்பது பொய்யாமொழி. புதியதோர் உலகம் செய்யப் புறப்படும் எழுச்சி வாழ்க" என்றார் அடிகள்.

நூற்றல் நெய்தல் பின்னல் தையல், கீற்றுப் பின்னல் கூடை முடைதல் என்பவை அங்கே தொடக்கமாயின. இவற்றுக்குப் பயிற்சி தந்தனர். மூலப்பொருள் வாங்கல், உருவாக்கம் செய்தல், வணிகச்சந்தை வாய்ப்பு, கை இருப்பு வைப்பு என்பவை எல்லாம் செய்யத் தக்காரைத் தெரிந்தனர்.

கூட்ட முடிவில் பாவை தான் பூட்டியிருந்த அணிகலங்களை ஒவ்வொன்றாகக் கழற்றினாள். அதனைக் கண்டதும் என்ன என்று பலரும் திகைத்தனர். மேல் வரும் தொழிலுக்கு இவை உதவும்; மேனி எழிலுக்கு இருந்த இவை தேவைக்குப் பயன்படட்டும் என்பதால் திருவே இவற்றைக் பெறுக என வழங்கினாள்.

ஆங்கிருந்த இருவர் இவற்றைத் தனி இடத்தில் நம்மிடம் கழற்றிப் பாவை தந்திருந்தால் கரவாகச் சுரண்டும் வேலையை நாம் செய்ய வேண்டி வராதே எனப் பேசினர்; எவருக்கும் புலப்படாமல் அடக்கிக் கொண்டனர்.

பாவையின் செயலைக் கண்ட அடிகள்,

> "இருப்பதை வேண்டா எனப்புறம் தள்ளல்
> விருப்பினை வென்ற விடுதலை வீறாம்"

என்று பாராட்டினார்.

> "ஒருமா மணிமே கலையே உருவமாய்த்
> தணியா உறுதியில் நிற்கும் தகவென"

திருமகள் பாராட்டினாள்.

திருமகள் காய்ச்சலில் பட்டு அனற்றிக்கிடந்த போது அடிகள் பட்ட துயரை நோக்கும் போதும், திருமகள் என்பால் காட்டிய பேரருள் பெருக்கை எண்ணும் போதும் என்செயல் பெருஞ்செயல் அன்றாம் என்றாள் பாவை.

எந்தப் பொருளையும் வீணாக்காமலும், எந்தப் பொழுதையும் வீணாக்காமலும் சொந்தத் தொழிலினும் மேலாகக் கொண்டு தொழில் செய்தனர்.

நூலோ பஞ்சோ நாரோ சிறிதும் வீணாதல் இல்லாமல் பாதுகாத்துப் பணிபுரிந்தனர்.

*"பாலாய்ச் சுரக்கும் தேன்பசுவே*
*பார்க்கும் பணியாம் எனக் கொண்டார்"*

ஒருமைப்பாடு காணாதவரும், ஒன்றைத் திறமாய்ச் செய்யாதவரும் வருநாள் எண்ணி வாழாதவரும் கூட, பொறாமைப் படும்படியாகத் தொழில் சிறப்பாக நிகழ்ந்தது. காலையில் எழுந்து கடமைகளை முடித்துக் கொண்டு தொழிலகம் வருவார் தொட்டில் குழந்தை, கைக்குழந்தை, பள்ளி செல் குழந்தை என்பவரொடு வருதலும், குழந்தைகளைக் களிக்கூடத்தில் விட்டுப் பணிக்களம் செல்லுதலும், கிழமைதோறும் அக்கிழமைச் செயற்பாட்டை ஆய்ந்து தெளிவு கொள்ளுதலும் தொழில் நிறைவுக்கும் வளர்ச்சிக்கும் உதவின. இம் மகிழ்வால்,

*"செல்வம் பெருக்கல் தேவைக்கே;*
*செயல்கள் அனைத்தும் தேவைக்கே;*
*கல்வி அனைத்தும் கனிவுக்கே;*
*கனிதல் அனைத்தும் கடவுட்கே;*
*சொல்லல் அனைத்தும் உயர்வுக்கே;*
*சுடர்தல் அனைத்தும் உலகுக்கே;*

*வெல்லல் எல்லாம் பொதுவுக்கே;*
*வெற்றி தோல்வி நமக்கிலவே"*

என்று பலரும் மகிழ்ந்து பாடினர்.

அதனைக் கேட்ட ஒருத்தி; எல்லாம் சரிதான்; ஆனால் நம் ஒன்றுபட்ட உழைப்புப்பயனைத் தின்று தொலைக்கும் ஏதோ ஒன்றும் உண்டு போலும் என்றாள். மேலும், இருப்புக் கணக்குக் குறைதலும் எடுப்புக் கணக்கு மிகுதலும் நெருப்புப் பற்றல் இல்லாமல் கரியாகுவதுபோல் காணப் படுதலும் அறிய வேண்டும் என்றாள் சிலம்பாயி. மேலும் கூறினாள்; பணிக்கு வந்தவர் முன்னே கொண்டிருந்த சொத்துக்கணக்கையும், இப்பொழு துள்ள சொத்துக் கணக்கையும் கண்டு சரிபார்த்தால் உண்மை வெளிப்படும் என்றாள். ஓரிருவர் முகத் தில் மாற்றம் தோன்றியது. வியர்த்துக் கொட்டியது. வீட்டில் உள்ளவற்றைக் காண வருவதற்கு முன் மறைத்து வைக்கும் துடிப்பு உண்டாயது. அரண்டு கிடந்தார் ஆட்டமெலாம்; அடங்கிக் போனார் ஆகும் பழிக்காக!

பாவை நேரே சென்றாள்; பதுக்கல் மறைத்தல் இல்லாமல் பூவைப் பறித்துப் படைப்பதுபோல் வைத்துவிட்டால் பழிவராது. பாராட்டும் பெறு வீர். இல்லையானால் பின்னால் நீங்கள் வருந்திப் பயன்படாது என்றாள். இன்னும் எவரும் இங்கு வருமுன் ஏற்ற முடிவு செய்யுங்கள் என்றாள்.

# 11. அன்பின் வழி

பாவையின் சொல்லைக் கேட்ட ஒருத்தி உண்மையை ஒப்புக் கொண்டாள். அவளை வணங்கினாள் பாவை. இணங்கி உண்மையை ஏற்பதால் இழிமை இல்லை என்று பாராட்டினாள்.

ஒருத்தி உண்மையை ஒப்புக்கொள்ள மறுத்தாள். பொல்லாப் பழி சுமத்துவதாகத் திட்டினாள். உண்மைக் கணக்குக் காணத் தூண்டியவர்களை யெல்லாம் வாய்க்கு வந்தவாறு பேசினாள். "என்ன செய்வாயோ செய்துபார்" என்று சொல்லிப் புலியாய்ப் பாய்ந்து வெருட்டினாள்.

*"உண்மை உணர்த்தி உயர்வுணர்த்தி*
*உள்ளம் திருந்த வழிகாட்டல்"*

எளிமை இல்லை என்பதை நினைத்துக்கொண்டு பாவை திரும்பினாள். அவள் தனியே சென்றாள் என்பதை அறிந்த திருமகள் அவளைத் தேடிக் கொண்டு போனாள். அவள் மீண்டு வாராமையை அறிந்து பாவை திகைத்தாள். அடிகள் இருவரும் எவர் துணையும் இல்லாமல் போனதை எண்ணி வருந்தினார். பாவையைப் பார்த்து,

*"யாரும் இன்றி நீதனியே*
*போதல்; திருவும் உனைத்தேடி*
*யாரும் இன்றித் தனியேகல்*
*இனிமேல் கூடா திங்குள்ளார்*
*யாரும் இலரோ உடனெய்த"*

என்றார். திருமகள் வந்தாள். நிகழ்ந்த பிழையைப் பொறுத்துக்கொள்ளுமாறு அடிகளை வேண்டி னர்.

மகளிர் மன்றத்தைக் கூட்டி ஆராய்ந்தனர்.

"பகலை இரவாய்க் காட்டுதலைப்
பாரா திருத்தல் தீதென்று"

முடிவெடுத்தார். இப்பொழுது எடுக்கும் நட வடிக்கை எவருக்கும் பாடமாக இருக்க வேண்டும் என்றனர்.

மகளிர்க்காகத் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பு இது. இதன் செயற்பாடு, ஆட்சி எல்லாம் உங்களைச் சேர்ந்தது என்றே தொடங்கியது. நடக்கும் குழந்தைக்கு நடைவண்டி தருவதுபோல உதவுதலே எங்கள் பங்களிப்பு என்றார் அடிகள்.

நடக்கும் போதே இடறியுளோம்; நலிவு இல்லா மல் செல்லவும் கடக்கும் தொலைவு கடக்கவும் வழிகாட்டல் வேண்டும் என்று அடிகளை மன்றத் தார் வேண்டினர். அடிகள், "யாதும் யார்க்கும் துயரின்றி, யாவும் நலமாய் முடிந்திடவும், மோதும் வழியை விலக்கிடவும் முயல்வோம்" என்றார். சிலம்பாயி முன்னர் வந்து சில கூறினாள்:

வாங்கல் சுரண்டல்; விற்பனைச் சுரண்டல், ஆள் எடுப்புச் சுரண்டல் ஆகிய எல்லாம் எனக்குத் தெரியும். நேரில் எல்லோரும் செல்வோம்; நயமாய்ச் சொல்வோம்; ஏற்க மறுத்தால் வீட்டை

முற்றுகை இடுவோம்; வன்முறை எதுவும் வேண்டா என்றாள்.

அவளும் அவளைச் சார்ந்து நிற்கும் கொடியவனும் காவல் துறையை நாடி அலைக்கழிக்க அஞ்சமாட்டார்கள். அதனால்,

"அச்சம் உடையார் வரவேண்டா
ஆர்த்துப் பேசிச் சண்டையிட
இச்சை உடையார் வரவேண்டா
என்ன வரினும் வருகஉயிர்
துச்சம் என்பார் ஒருங்காகத்
துணிந்து சொல்வோம் துணைநமக்கு
மெச்சும் அறமே ஆமென்றாள்"

என்றாள் திருமகள். அறத்திற்குச் சார்பாகிய அன்பு மறத்திற்கும் துணையாகும் என்ற வள்ளுவத்தை அடிகள் எண்ணினார்.

தங்கத்தாயின் வீட்டு முற்றத்தில் விடியுமுன்னரே எவ்வொலியும் இல்லாமல் சூழ்ந்து அமர்ந்தனர். உண்ணா நோன்பு கொண்டனர். முன்னமே தங்கத்தாய் செய்த ஏற்பாட்டின்படி காவலர் வந்து நின்றனர். ஆனால் முழக்கம் இல்லை! வன்முறை இல்லை! என்ன செய்வது? அவர்களும் இருந்தனர். ஊரும் கூடியிருந்தது.

அடையும்வரை வீடு திறக்கப்படவில்லை. எவரும் இரவிலும் எழுந்து போகவும் இல்லை. மறுநாள் விடியல் போதில் சிலர் கடன் கழிக்கச்

சென்றனர் மீண்டனர் அமர்ந்தனர். என்ன முடிவு செய்வது?

கரவாகச் சுரண்டிச் சேர்த்த கணக்கு தங்கத்தாய் கையெழுத்திலேயே இருப்பதால் காவல்துறை தன் கடமை செய்ய இயலாமல் வீட்டுக் கதவைத் தட்டித் திறந்தது. தங்கத்தாய் தன் உறவாகிய பாவையை அழைத்தாள். அவளோடு திருமகளும் சென்றாள்.

தங்கத்தாய் அழுதாள்; கணக்கைச் சரியாகப் பார்ப்பேன்; தீர்ப்பேன்; என்குழந்தை சாவக் கிடக்கும் நிலையுற்றான். உரியோர் தாமும் ஊரில் இல்லை என்றாள்.

"பாவம் கேட்க வந்தோமா?
பாவம் செய்ய வந்தோமா?

என்று பாவையும் திருவும் வருந்தினர். பகலிலேயே இதனை உரைத்திருந்தால் நாங்கள் மருத்துவம் பார்த்திருப்போமே என்று சொல்லி, குழந்தையை எடுத்துக்கொண்டு மருத்துவமனைக்கு ஓடினர். தங்கம் 'ஓவென்று அழுதாள். எல்லாம் நன்றாக முடியும் என்று உண்ணாநோன்பினரை வணங்கினாள். அவர்கள் பரிவோடு பிரிந்து சென்றனர்.

நேற்றைப் பகலே குழந்தைக்குத் தக்க மருந்து தந்திருந்தால் இந்த அளவு துயர் ஏற்பட்டிராது என்று கூறிய மருத்துவர் உடனே மருத்துவம் செய்தார்.

வன்முறை என்பது அறவே இல்லாத அறப் போராலேயும் இத்தகு துயரங்கள் விளைகின்றன என்றால், வன்முறைப்போரால் விளையும் விளைவை என்சொல்வோம்! அருள் அடிகள் செய்தியறிந்து மருத்துவமனை எய்தினார். குழந்தைக்குத் துயர் எதுவும் இல்லை என்பதே நிறைசெய்தி என வாழ்த்தினார்.

அடிகள் சாலையில் தம் வண்டியில் வரும்பொது, சாலை மரங்களை வீழ்த்தித் தடையுண்டாக்கிய நிகழ்வு ஒன்றனை எண்ணி வருந்தினார். மகப் பேற்று நிலையில் தவித்த ஒருதாயைக் கடந்து செல்லவும் விடாமல் தடுத்து வண்டியிலேயே மறைப்புத் துணி கட்டி மகப்பேறு பார்த்த கொடு மையை உரைத்து உருகினார்.

*"வெறியை வெறியால் அழித்திடுவோர்*
*வெல்லார் என்றும் மற்றொருவர்*
*வெறியால் அழியத் தூண்டியவர்*
*வெறிக்கே பலியாய் முடிந்திருவார்"*

என்று சொல்லிய அடிகள் திருமகள், பாவை ஆகியவர் செய்த அருட் செயலைப் பாராட்டினார்.

*"அடிகள் தம்மை அடுத்திருக்கும்*
*அடியேம் யாமும் இதுவன்றிக்*
*கொடிய துயரம் எமையடுத்துக்*
*கொல்ல வரினும் யாம் செய்யும்*

முடிவொன்றில்லா அருள் நெறியை
முன்னல் அன்றிப் பிறவழியில்
அடிகள் வைக்க அறிவேமோ
அடிகள் அருளைப் புரியேமோ?”

என்று திருமகளும் பாவையும் கூறினர்.

தாக்க வந்த தடியன் ஒருவனையும் தம்பி என்று அழைத்துத் தம்மைத் தாக்க ஏவிவிட்டவர் விருப்பை நிறைவேற்றி அவர்தரும் கொடையைப் பெறுக என்ற குமணவள்ளல் நீவிர் என்பதை இளமையிலேயே அறிந்த எங்களுக்கு இதனை அன்றி வேறு என்ன செய்யக்கூடும் என்றனர்.

## 12. உருகிய உருக்கு

நிகழ்ந்தவற்றை நினைத்து, மேலே நல்லவையாக நிகழ வேண்டுமென எண்ணி அனைவரும் செயலாற்றினர். ஒருவாரத் தளவில் தங்கத்தாய் தன் மகனை எடுத்துக் கொண்டு அருளகம் வந்தாள். அடிகள் முதல் நால்வரும் கூடியிருந்த பொழுதில் அவள் கரவாகக் கொண்ட தொகையில் செலவாகி யது போக, இருப்பதை எல்லாம் சேர்த்துக் கொண்டு வந்தாள்.

அவளுக்கு இளமையிலேயே மணம் நிகழ்ந்ததை யும், அவன் ஒரு பிள்ளையைத் தந்து இறந்து போனதையும் அவள் வளமாக இருப்பதை உணர்ந்து அவளை ஒருவன் அடுத்து நின்றதையும்

அவன் அலைக்கழிக் கெல்லாம் ஆளாயதையும் உரைத்து அழுதாள்.

அவள் நிலைமையை எண்ணிய பிச்சை வருந்தினார். தாயுமானவர் பாடிய அன்பு நெறி அறியாத என்னை அறியாத பருவத்தில் ஆசைப் பெருக்கைப் பெருக்கி என்னும் பொருளமைந்த சுகவாரிப் பாடலைப் பாடினார். தங்கம் உருகினாள். தான் செய்த கேடுகளையும் தனக்கு ஏற்பட்ட துயரங்களையும் எடுத்துரைத்தாள்.

சிலம்பாயி அறிவுறுத்தியதைக் கேட்டுத் திருந்தியிருந்தாலும் இவ்வளவு தொல்லைகளும் இழிவுகளும் நேர்ந்திருக்க மாட்டா என்றாள். என் பிள்ளையை அடிகளிடம் ஒப்படைத்து விட்டு எங்கேனும் போய்விட எண்ணி வந்தேன். ஆனால் இங்கே தூய்மை பேணல், தோட்டம் தோப்பு ஆகியவை பேணல், மலர்பறித்தல், வழிபாட்டுக்கு உதவல், சமையல் பணிபுரிதல் என்பவற்றை நான் செய்வேன். மாதர் மன்றம், தொழிலகம் ஆகியவற்றில் நான் பங்கு கொள்ளமாட்டேன். ஐயா அவர்களின் இசைப்பாடல் கேட்டு உண்டாகும் உருக்கம் என்பாவங்களுக்குக் கழுவாயாக இருக்கும் என்றாள். பாடலிசையால் வந்த சிலம்பாயி தங்கத் தாயைக் கண்டு தழுவிக் கொண்டாள். நிகழ்ந்து முடிந்த துயரச் செய்தியைக் கனவாக எண்ணி, புதுப்பிறப்பென எண்ணி வாழ்க என்ற சிலம்பாயி, பிச்சையாரை நோக்கியும் அடிகளை நோக்கியும்,

*ஒவ்வொரு நாளும் காலை*
*ஓதுக தாயு மானார்*
*செல்விய பராப ரப்பா*
*செவியினில் இன்ப வாரி*
*வவ்விய வடிவ ராகிக்*
*கடமைகள் புரிதல் வேண்டும்*
*இவ்வகை அருள்க என்றாள்*
*இசைந்தனர் அடிகள் தாமே!*

## 13. ஒருநாள்

அருளகத்தை விரும்பித் தேடி வருபவர் தொகை பெருகியது. பொழுது மறைந்தது; பின் எழுந்தது; நம்பொழுதும் அவ்வாறே முடிந்தது; பின் விடிந்தது - என்று சொல்லும் வாழ்க்கை அன்று அடிகள் வாழ்க்கை.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நூலாக எழுது மாறு விரிந்ததும் சிறப்புடையதுமாம் வாழ்வு அதுவாம். அருளடிகளின் வாழ்த்துப் பெற என வருவார். அப்படி வருபவர் ஒருவர் இருவரா? வரிசை வரிசையாய் வருவர்! இன்ன பொழுது என்ன இல்லாமல் எப்பொழுதும் வருவர்.

எங்களுக்கு இன்ன நன்மை எய்தியது என்பதைக் கூறுவதற்காக வருபவர், அன்று நீங்கள் செய்த உதவியால் இன்று இப்பேறு வாய்த்தது என்று கூற வருபவர், பார்த்திடவும், பயிற்சியில் சேரவும் மன்றம் மண்டபம் காணவும், ஊர்மாறிப் போகி

றோம் என்னவும் வருபவர்க்கெல்லாம், அவரவர்க் குத் தக்கவை சொல்லி அனுப்புதலும் குடிப்பும் உணவும் வழங்கலும் முறையாக நிகழ்வனவாம்.

வைகறைப் பொழுது வருமுன்னாகவே அடிகள் தாம் தங்கும் அறை விடுத்து வெளிப்பட்டு இறை யருள் போற்றித் தோட்டம் தோப்பு ஆகியவற்றைக் காண்பர். அன்று செய்ய வேண்டும் பணிகள் எவையெனத் திட்டப்படுத்துவர். ஏழுமணியளவில் ஏற்ற உணவு கொள்வர். அதன்பின் தம் அலுவல் களமாகிய அருளகத்தை அடைவர். பகல் பன்னி ரண்டு வரை ஆங்கிருந்து கடமைகள் புரிந்து வழிபாட்டுக்குச் செல்வர். அதன்பின் அருளகம் வந்த அனைவரொடும் நண்பகல் உணவு கொள்வர். பகல் ஒருமணி முதல் இரண்டு மணிவரை 'அறிதுயில்' என அமைந்து ஓய்வு கொள்வர்.

மீண்டும் அருளகம் எய்திக் கலை நிலையங்கள் தொழிலகங்கள் ஆகியவற்றின் பணிகளைத் துறை வாரி ஆய்ந்து முடிவு எடுப்பர். மாலையில் மயிலும் மானும் பிறவும் கண்டு உலாவுவர். மறுநாள் இன்ன இன்ன செய்ய வேண்டும் எனத் திட்டம் தீட்டி உரியவர்களிடம் அவற்றை ஒப்படைப்பர். இரவு ஏழுமணியளவில் உணவு கொண்டு படிப்பு எழுத்து வழிபாடு என்பவற்றுடன் பத்துமணி அளவில் கண்ணயர்வர்.

*"ஒருநாள் பணிதான் ஒருநாள் பணியா?*
*எழுநாள் பணியும் இதனை ஒப்பதோ?*
*வாழ்வில் எவர்க்கும் ஒருநாள் இந்நாள்*
*வந்திடல் உண்டோ?"*

என்று எவரும் எண்ணுமாறு ஒவ்வொரு நாள் நடைமுறைகளும் அமையும்.

ஒருநாள் ஆறுபேர் அடிகள் முன் வந்தனர். நால்வர் ஆடவர். ஒருவர் தாய்; மற்றொன்று சேய்.

பெற்றதாய் கண்ணீரும் கம்பலையுமாக நின்றார். பெண்ணின் பெருமை பேசிய மண்ணின் நிலைமை இப்படி ஆயதே என நொந்தார். இந்தக் குழந்தை சொந்தக் குழந்தை. எடுத்த குழந்தையோ எவரோ கொடுத்த குழந்தையோ இல்லை. பெற்ற பிள்ளையை என்னைவிட்டுப் பிரிக்கப் பார்க்கிறார். என் உயிரை விட்டாலும் விடுவேனே ஒழிய இவ் வுயிரை விடமாட்டேன். இப்பிள்ளையை விட்டு விட்டு என் பெற்றோர் வீட்டுக்கு ஓடச் சொல்கிறார். எட்டு மாதங்களுக்கு முன் இவள் அப்பன் ஓடிப் போனான். அதன்பின் இவர்கள் படுத்திய பாட்டால் செத்துச் செத்துப் பிழைக்கிறேன். கொள்ளிக் கட்டையால் இவர்கள் சுட்டதை ஊரே எதிர்த்தும் இவர்கள் அசையவில்லை. நாறிய புண்ணையும் நையமிதிக்கும் இவர்கள் உறவினராம்! இவர்தாம் மாமனார்!

என்மகன் உன்னால் ஓடிப்போனான்; என் மகனை மீட்டல் உன்கடன்; இல்லையேல் உன்னை ஓட்டல் எம்கடன் என்கின்றனர். வளர்ப்புக்கூலி ஆறாயிரம் தந்துவிட்டு ஆற்றிலோ குளத்திலோ விழுந்து தொலை என்கின்றனர். அடிகளை அறிந்த ஒருவர் இங்கே சென்றால் தொல்லை ஒழியும் என வழிகாட்டினார் என்றாள்.

தெய்வமே ஏவ வந்தனை அம்மா! திகைக்க வேண்டா; ஊனுயிர்க் குதவல் ஊனுயிர் உடையவர் கடமை என்று சொல்லி ஆறாயிரத்தை அவள் மாமனிடம் அடிகள் வழங்கினார். உயிர்க் கொலைக்கு ஒப்பானது உங்கள் செயல் என்பதை எண்ணுங்கள் என்றார். "எண்ணினோம்; பணம் சரியாக இருக்கிறது" என்று கூறிச் சென்றனர். "மாறா உளங்கள் மாறுவதெந்நாள்?" என்று அடிகள் எண்ணினார்.

திருமகள் அங்கே வந்தாள்; செய்தி அறிந்தாள்; நீ என் தங்கை எனக் குழந்தையைக் கொஞ்சினாள். ஆனால் என்னினும் பேறு பெற்றவள்; ஏனெனின் உன் அன்னையோடும் உள்ளாய்! என்றாள்.

அப்பொழுது பாவையும் பெரியவர் பிச்சையும் அருளகம் வந்தனர். திருமகள் அடிகளிடம் அடிகளே நம்வழக்கப்படி அருளகம் வந்த புதுப்பிற வியர்க்குப் புதியபெயர் சூட்டுவோம். இக்குழந்தைக் குப் பெயர் சூட்டும் வாய்ப்பை எனக்கு அருள

வேண்டும் என்றாள். அப்படியே செய்க என்றார் அடிகள்.

திருமகள், அருளகம் வந்த இம்மலர் 'அருள் மலர்' என்று பெயரிட்டாள். அனைவரும் வாழ்த்தினர். பாவை என் பங்களிப்பாக அன்னைக்குப் பெயர் சூட்ட அருளவேண்டும் என்றாள். அவ்வாறே 'அங்கயற் கண்ணி' எனப் பெயர் சூட்டினாள்.

பெரியவர் பிச்சை யான் வாழ்த்திசைக்க அருள வேண்டும் என்று வேண்டினார். "தென்னன் தமிழின் உடன்பிறந்த" என்னும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்ப் பாடலை இசைத்தார்.

"அருள்சூல் கொண்ட அங்கயற்கண்
அமுதே தாலோ தாலேலோ"

என்று பாடி முடிக்க,

"மெய்யாய்ப் பொருந்தி
மேவிய இன்பம்
தமிழின் இனிமை"

என்றார் அடிகள்.

இசைப்பா ஒலி கேட்ட சிலம்பாயி கைத்தட்டிக் கொண்டு வந்தாள். "ஐயா பாடலால் ஆயி வந்தனள்" என்றனள் திருமகள். ஆமாம் என்றாள் சிலம்பாயி.

# 14. பனிமலர் வரவு

திருமகளின் பள்ளித்தோழி பனிமலர் என்பவள் திருமகளைக் காண அருளகம் வந்தாள். அடிகளைக் கண்டு வணங்கினாள். அந்நாள் இங்கே பெற்ற பயிற்சியின் சிறப்பையும் பயன்பாட்டையும் எடுத்துக் கூறி மகிழ்ந்தாள். ஏழையர்க்கு எழுத்தறி வித்து ஏற்றம் தரும் அடிகள் பணியே ஒவ்வொருவர் அணிகலங்களாகவும் நாளெல்லாம் திகழ்வதை உரைத்தாள். ஊருக்கு உழை என உந்துதல் ஆகிப் பாருக்கு உழையெனப் பாடம் ஆகியதைப் பாராட் டினாள்.

பின்னர்த் திருமகளைக் காணச் சென்றாள். திருமகள் பனிமலரைப் பார்த்த பார்வை பார்வை யாய் இருக்கக் கூர்ந்து நோக்கினாள்.

*"எடுத்துச் சூடி எக்களிப் போடும்*
*நடக்க நினைந்தேன் நாணும் என்னுளம்*
*ஏனெனில்,*
*பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன்"*

என்று, தாயுமானவர் தடுத்து நிறுத்துகிறார் என்றாள்.

அவள் நலம்; வீட்டில் உள்ளார் நலம்; கல்வி தொழில் பற்றிப் பலவும் கேட்டாள். திருமகள் என்னும் பெயர்க்குத் தக வாழ்கின்றனை! பிறவிப் பயன் என்னத் தக்க இத் திருப்பணி எல்லார்க்கும் வாய்ப்பதோ எனப்பாராட்டினாள்.

*"கோயிற்குள்ளுறு சிலையாய் இருந்திட*
*ஆயிற் றில்லை; ஆயினும் கோட்டைச்*
*சுற்றிலே நிற்கும் கற்களுள் ஒன்றாய்*
*நிற்பதற் கேனும் நினைந்திவண் வந்தேன்"*

என்றாள்.

என் தந்தையார் பொறியாளர்; சுற்றம் தாங்கும் செவ்வியர் எம் அன்னை. சிறிய தந்தையார் மருத்துவர்; குடும்ப விளக்கு என் இனிய சித்தி. எங்கள் குடும்பத்தில் நாங்கள் நால்வர்; நான் தலைமகள். என்னிடம் தந்தையார் என்ன கற்க விரும்புகிறாய் என்றார்.

*"துரும்பள வேனும் தொண்டு செய்திட*
*வேண்டும் என்றுளேன் வேண்டும் அதற்கென்*
*சிறிய தந்தையார் செய்திடும் மருத்துவம்"*

என்றேன்.

பேரூரில் இருந்து சிற்றூர் சென்று மருத்துவம் செய்யும் சிறிய தந்தையார் முன் நோயர் எவ்வளவு துயருடன் வருகின்றனர்; உடனே அவர்கள் உள்ளகத்தில் அப்பா எப்படிப் புகுந்து நொடிப் பொழு தளவில் நோயை அகற்றுகிறார் என்பதைக் கண்டுளேன். அதனால் மருத்துவத்தை நான் விரும்புகிறேன் என்று சொல்லி அதனைக் கற்றேன்.

இரண்டாண்டுகள் கல்வியில் சென்றன. பயிற்சித் துணையாக ஒருவர் வந்து என்னைப் புரிந்து உதவினார்.

"என்னை அவரும் எண்ணினர் போலும்
என்னுளம் தானும் அவருள் படிந்தமை
தன்னையும் எண்ணினர் போலும்

இருவரும் பேசுவோம்; பேசுவோம்; தொண்டு பற்றியே பேசுவோம்! "ஊருக்கு உழைப்பதே உயர்தவம்" எனக்கொண்டோம். இருவரும் தொழிலாலும் தொண்டாலும் வாழ்வாலும் இணைந்து செயல்படல் சீரிதாம் என நினைந்தோம்.

கண்கள், காதுகள் ஆகிய உறுப்புகள் இரண்டு இரண்டாய் இணைந்தும் ஒன்றாய் - ஒரு முகமாய்ச் செயல்படும் இயற்கையை உணர்ந்து தெளிந்தோம்.

"இணைஇணை இலைகள் இணைஇணைப் பூக்கள்" இணைதல் இயற்கை கண்டு நம்மவர் போற்றியதை ஏற்பதெனத் தேர்ந்தோம்.

என் தாத்தா ஒருவர் உள்ளார்; அவர் தக்கவழி காட்டுவார். அவர் காட்டும் வழியைப் போற்றி நடப்பது எங்கள் பெற்றோர் நடைமுறை என்று அவர்க்குக் கூறி தாத்தாவைக் கலந்தேன். அவர், கற்கும் நாள்வரை நட்பு மட்டுமே போற்றுக. பேச்சுத் துணையாய், உதவித் துணையாய் இருக்க. கற்றபின்,

"யாதும் குறையிலை என்னக் காணின்
இருபால் பெற்றவர் தங்கள் இசைவுடன்"

ஒருவர்க்கும் ஒருகுறை இல்லாமல் திருமணம் புரிக என்றார். அவர் சொல்வழி நின்று அவரே

திருமணம் நிகழ்த்தி வைக்க இணைந்தோம். பொருள் தேடுதல் தேவையே எனினும் அருள் தேடுதல் அதனினும் தேவை என உன்னை நாடிவந்தேன் என்றாள்.

உன்னவர் பெயர் என்ன என்பதைச் சொல்லேன் என்றாள் திருமகள். நல்லவேளை! உன் பெயர் திருமகள் ஆயது! முல்லை என்றால் அவர் தேரையே கொண்டு வந்து நிறுத்திவிடும் பாரிவேள் என்றாள் பனிமலர்.

உன் குறும்பு இன்னும் போகவில்லை என அவள் கன்னத்தை மெல்லெனத் தட்டினாள் திருமகள்.

பனிமலர் நீ நீராடிய கூந்தலொடு வந்தாய். அந் நீரை என் கன்னத்தில் படத்தழுவி உனக்கு இரட்டைச் சுழி என்றேன். ஆமாம் பனி என்பதில் உள்ள 'னி'யில் சுழி இரண்டு தானே எனச் சிரித்தாய்! இப்பொழுதோ உனக்கு மூன்று சுழி என்றாள் திருமகள். என்னடி புதிர் போடுகிறாய் என்றாள் பனிமலர். "பார்! நீ இப்பொழுது பணி மலர் ஆக விரும்புகிறாய் அல்லவா!" 'ணி'யில் மூன்று சுழிகள் இல்லையா என்றாள் திருமகள்.

பாவை திருமகளைத் தேடிக் கொண்டு வந்தாள். "பனி மலர் இவள்" என்று பாவைக்கு அறிமுகப் படுத்தினாள். "ஆம்! நாம் பன்முறை பேசி மகிழ்ந்த வளைப் பார்ப்பதில் மகிழ்ச்சி" என்ற பாவை, "பொழுது போயிற்று; விழா தொடங்கும் வேளை

யாயிற்று; பனிமலருடன் அடிகளையும் அழைத்துக் கொண்டு விழா மேடைக்கு வா" என்று பாவை விரைந்து சென்றாள்.

## 15. தாயுமானவர்

கல்லூரி ஆண்டு விழா, சிறப்பாகத் தொடங் கியது. மக்கள் பெருக்கமாகக் கூடியிருந்தனர். இறைவணக்கம், வரவேற்பு, நாடகம், நடனம், இசை, உரையாடல் என்பவை அலைஅலையாக மேடை யேறின. அருளடிகள் நல்லுரை கூறுவர் என அறிவித்தனர்.

அடிகள், சொல் உலகம் கடந்த சுவைவெள்ளக் காட்சியாகக் கலைகள் நிகழ்ந்தமையைப் பாராட்டி னார்.

தேடிப் போய்த் தீமை செய்யும் உலகத்தில், தேடிப் போய் நன்மை செய்வாரைக் காணும்போது தெய்வக் கொடையென மகிழ்கிறோம். நீங்கள் எங்களைத் தேடி வராமல், நாங்கள் உங்களைத் தேடி வந்துள்ளோம். நாங்கள் கூடிவந்து தொண்டு செய விரும்புகிறோம். ஏற்றருள வேண்டுமெனும் இப் பனிமலரைப் பாருங்கள்! அவள் உணர்வொத்து நின்று தொண்டாற்றத் துடிக்கும் பாரிவேளைப் பாருங்கள்! பிறந்த மண்ணுக்குப் பெருந்தொண்டு செய்ய முன்வந்த இவர்களைக் கல்லூரி, முதியர் இல்லம், களிக்கூடம், தொழிலகம் ஆகிய எல்லாவற்

றின் சார்பாகவும் பாராட்டி மகிழ்கிறோம். பரிசுகள் வழங்குகிறோம். உங்கள் தொண்டு வாழ்க என வாழ்த்துகிறோம்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னே எங்கள் பெற்றோர் இல்லறம் ஏற்கக் கூறியபோது "வீட்டுக்கு ஒரு பிள்ளை நாட்டுக்கு ஒரு பிள்ளை" என்று கூறி, நான் நாட்டுப் பிள்ளையாகத் துறவு மேற்கொண்டேன். இப்பனிமலரும் பாரிவேளும் இணைந்து தொண்டாற்றக் கிளர்ந்தது.

*"இல்லறச் சீருடன் துறவறச் சீரும்*
*மல்கிய தென்னப் போற்றுவம் இனிதே"*

என்றார். மேலும், 'ஏதிலி' யான் என்னும் சொல்லை எவரும் சொல்லாதீர். எவரேனும் சொன்னால் செவி யேற்காதீர்.

*"சுடர்தந்த கண்ணுடையார்*
*நல்லாற்றல் செவியுடையார்*
*நறுஞ்சுவைய நாவுடையார்*
*காதமணம் முகர்கின்ற*
*கவின்மூக்குத் தாமுடையார்*
*தீதெதுவும் அண்டாத*
*திடமுடைய உடலுடையார்*
*ஏதிலியர் யாமென்ன*
*இயம்புதலும் ஆவாரோ?*
*இறையருளை நம்புகின்றோர்*
*ஏதிலியர் ஆவாரோ?*
*ஏதிலியர் எனத்தம்மை*

எண்ணுவதே நம்பிக்கை
யாதிருந்தும் இல்லாதார்"

என்றார் அருளடிகள். மின்வெட்டென மேடை ஏறினால் திருமகள்.

"ஏதிலியர் இல்லேம்யாம்
ஏதிலியர் ஆகேம்யாம்
தாயாகித் தந்தையுமாய்த்
தாங்குகின்ற தெய்வமுமாய்
சேயாகி மகிழ்விக்கும்
செம்பொருளாம் நீரிருக்க
ஏதிலியர் ஆகேம்யாம்"

என்று கூறிக் கண்ணீர் வார்ந்தாள். பின்னர், அருளடிகள்

எந்தக் குழந்தை என்றாலும்
எந்தம் குழந்தை எனப்பேணி
இந்தக் குழந்தை எச்சாதி
எந்தச் சமயம் என்பதுவும்
தந்த தாயர் தந்தையர்கள்
எவரே என்ன எண்ணாமல்
முந்து முந்து வந்தெடுத்து
முத்தாய் வளர்த்துக் காக்கின்றார்
எவரே உதவுவார்? எவரே பாராட்டுவார்?
எவரே துணையாவார்? எவரே பின்வருவார்?

என்பவற்றை எண்ணாமல் தாயாய்த் தாங்கி அரவணைக்கும் அடிகள் நம் அடிகள்.

"இவரால் சிறக்கும் பொறியாளர்
இவரால் ஓங்கும் ஆசிரியர்
இவரால் திகழும் மருத்துவர்கள்
இவரால் வளரும் இறைத்தொண்டர்
இவரால் வாழும் திருச்செல்வர்
இவரால் மலரும் கொடையாளர்
எவரை எண்ணி நான்மொழிவேன்?"

இவர்க்கும் துயரம் இன்றேயோ?

என வினாமேல் வினா எழுப்பினாள்.

தேள் பாம்பு விலங்கு ஆயவை தெய்வப் படைப்பு என நான் உணர்ந்தால், "வாளும் வில்லும் வேலும் மாந்தன் தன்னலத்தால் ஆக்கப்பட்டவையே" என்னும் அடிகள், அருள்வெள்ளம் அளவிடக் கூடுவதோ?

பிறரை வாழவைக்கும் பெருந்தகை வாழ்வினரை, வாழவைத்துக் காக்கும் அருள் உலகமே வாழும் உலகம் எனச் சொல்லி அமைகின்றேன் என்றாள்.

பிச்சைப் பெரியவர் தாயுமானவர் பாடிய பராபரக் கண்ணிகள் சிலவற்றை இசைத்தார்.

"வாழும் தாயு மானவர் வாழ்க!
வாழச் செய்பவர் வாழ்ந்தால்
வாழும் உலகம் வழிவழிச் சிறந்தே"

எனக் குறும்பாவிகம் நிறைந்தது.

## குறும்பாவிக உரைநடை

புதிது புனையப்பட்ட குறும்பாவிகம் **வாழும் தாயுமானவர்** என்பது. அதன் உரைநடையாக்கம் இது. ஓடுகிற ஓட்டத்தில் கதையும் கருத்தும் புரியும் வகையில் எழுதப்பட்டது இது.

பாடலில் உள்ள குறிப்பு, சொற்பொருள் அணிகள், மேற்கோள், புனைவு என்பவை உரை நடைக்குத் தகக் குறைக்கப்பட்டனவாம்.

எளிய நடைப் பாடல்களாகக் குறும்பாவிகம் இயன்றாலும் உரைநடை ஓட்டமே எளிமையாகப் பொருள் விளக்கம் தரும் என்னும், தக்கார் தூண்டுதல் கொண்டே தனியே உரையடையாக்க மும் செய்யப்பட்டதாம்.

தொடக்கத்தில் இருந்து வளர்நிலையில் கற்பார்க்குக் குறும்பாவிகச் செய்யுள் ஓட்டமும் சுவையூட்டும் என்பதால் ஆங்காங்கே பாவிகப் பாடல்கள் சில காட்டப்பட்டன.

உரைநடை ஆதலால் கதைச் சுருக்கம் வேண்டி யது இல்லை. தாயுமானவர் பெருந்தக்க அருளாளர். ஆன்மநேயப் பெருக்கே வாழ்வாகியவர்; அருள் வெள்ளப் பெருக்காகப் பாடல்கள் அருளியவர். குறைவிலா நிறைவின் நெஞ்சராக வாழ்ந்தவர்.

அவரைப்போல அருளாளர் வாழ்வு அமையக் கூடும் என்பதற்கு வழிகாட்டியவர்.

ஆன்மநேயப் பெருக்குடையராக வாழ்ந்து, ஆருயிர்த் தொண்டே தம் பிறவிப் பேறெனக் கொண்டார் எவரும், **வாழும் தாயுமானவரே**. தாயுமானவராகக் கண்ணேரில் வாழ்ந்து காட்டு வாரைக் கண்டு, வாழவருவார்க்கு வரவேற்புக் கூறுவது இவ்வாழும் தாயுமானவர்.

தாம் பெற்ற பிள்ளைக்கும், தக்கவை செய்ய இயலாப் பெற்றோர்பெருகும் மண்ணிலே, எவர் பெற்ற பிள்ளையும் யாம் பெறாது பெற்ற பெருந் தகைப் பிள்ளை எனக் கொண்டு அருள்வாழ்வு வாழ்வார் ஆண்பால் ஆயின் என்ன? பெண்பால் ஆயின் என்ன? அவரெல்லாம் தாயுமானவரே! வாழும் தாயுமானவரே!

தாயுமானவர் இடம்தொறும் காலம்தொறும் தோன்றிச் சிறக்கும் மண், எம்மண் எனினும் அதுவே விண்ணின்பம் ஈதென நிலைநாட்டும் மண்!

“ஏதிலியர் யாம் இல்லேம்; முது துயரர் யாம் இல்லேம்; என்னும் எழுச்சி வாழ்வு உண்டாகப் பாடுபடுவார் இந்நாளில் கட்டாயம் தேவை!

ஓய்ந்து கிடப்பாரோ உழையாமல் உண்பாரோ ஒருவரும் இல்லை என்னும் சிறப்பமைந்த வீடு, நலவீடு; நாடு, நலநாடு! உடல் நலத்திலும் உயர்நலம்

உளநலம்! **உளநல முதிர்வுக்கு ஒருபெயர் சூட்டினால் அதன்பெயர் தாயுமானம்.**

ஒரு குழந்தை பிறக்கிறது. அது பிறக்கும் நேரம் அது வேண்டிக் கொண்டதா? தானே அமைத்துக் கொண்டதா? பெற்றவர் பெறுதல் இன்றிப் பிறக்குமா அக்குழந்தை? பெற்றவர் பெற்ற நேரம் பொல்லாதது என்னலும் ஆகுமா? பிறக்கும் நேரம் மணித்துளி தவறாமல் அவரோ தீர்மானிக்கிறார்? பிறந்த நேரம் பொல்லாதது என்றால், அதற்கு முதலாவதான பெற்ற நேரம் பொல்லாததில்லையா? முடியுமானால் நல்ல நேரம் கண்டு அந்நேரத்தே பிறக்கப் பிறப்பியம் (சாதகம்) பார்ப்பார் ஆக்கி வைப்பாரா?

தான் பிறக்கும் நேரம் கெட்டது நல்லது என்பதைப் பிறக்கும் குழந்தை அறியுமா? அக் குழந்தை பிறந்த நேரம் குடிகெடுக்கும் நேரம் என்பதும், அதனைப் பழிப்பதும், பாடெல்லாம் படுத்துவதும் பாவத்தில் பாவம் எனப் பகுத்தறிவோடு உணரவேண்டும் அல்லவோ! பிறந்த மகள், திருமகள். அவள் பிறந்தபோது தந்தை இல்லை; தாயும் இறந்தார்; எடுத்து வளர்த்த மாமனும் இறந்தார். இம் மூவர் இறப்புக்கும் அறிவறியா இப்பிள்ளை பிறந்த நேரக்கெடு! இவளே அவர்களைச் சாகடித்தாள்! இவர்களைத் தின்னவே பிறந்தவள் இவள். அதனால் திருமகள் அல்லன்!

'தின்னி' என்று சொல்லொணாத் துயரூட்டும் அறியாமை - மடமை - அகல வேண்டாவா?

கலங்கியும் மயங்கியும் இருக்கும் தெளிவிலாரைத் தெளிவுறுத்துவது அல்லவோ அறிவின் பயன். ஆக்கம் செய்வார் கடன்! ஆனால் சோதிடர் கண் என்ன? பணம் பறித்தல்! பழிபாவங்களைப் பெருக்கு தல்! தன்னம்பிக்கையைத் தகர்த்தல்! இறைமை மெய்யறம் போக்கி, பொய்மைப் பேய்மையைத் தஞ்சமுற வழியாக்குதல்! இறைமை நம்பிக்கை யுடையாரை நாள் என் செயும்? கோள் என் செயும்? முழுமுதல் இறைமை வழிபாட்டை முற்றாக ஒழிக்கப் பிறந்த ஒன்றே ஒன்பான் கோள் வழிபாடு என்பதை நம்பிக்கை உலகம் கண்டு தெளிவடை யுமா? கணிகக் காதலை ஒழிக்குமா?

இனி, "உள்ளம் விரிந்தால் உலகெலாம் சொந்தம்" என்பதற்கு முதல் விளக்கம் பெரியவர் பிச்சை. முழுமை விளக்கம் அருளடிகளார்!

இருவரும் துறவர்; இறைமைப் பணியர். குறைமை வழிபாட்டை ஆன்மநேய வழிபாடாக்கி உயிர்த்தொண்டு புரியத்தம்மைத் தாமே ஒப்படைத் துக் கொண்ட தண்ணளியர். இவரைத் தூண்டினார் எவர்? இவருள் இருந்த இறைமையே ஆன்மநேயத் தூண்டலாய் பெறாப் பிள்ளைகளை, பெற்ற தாய் தந்தையர் பேணலினும் மிகப்பேணு பெற்றியராயி னர். படமாடக் கோயிலை மறவாமலே - குறை

காணாமலே - நடமாடக் கோயில் பணியும் செய்தனர்.

பிச்சையார் பூந்தோட்டப்பணி, உருகிப்பாடும் இறையிசைப் பணி எவரால் தள்ளப்பட்டன? எப்படித் தள்ளப்பட்டன? இறைமையை இழிமைப் படுத்தும் தன்னலச் சூழ்ச்சியர் மூவரால், திருப் பணிகளை விட்டு வெளியேறினார். அதனை எப்படி ஏற்றுப் போற்றினார்? ஆன்மநேயப் பணியை எங்குக் கொண்டார்? கொள்ள நேர்ந்த சூழல் என்ன? அன்னக் காவடி அவர் தமக்காகவோ தோளில் தாங்கினார்? அதில் மானம் கருதினாரா? தொண்டர் மானம் பார்க்கத் தொடங்கினால், அவர் தொண்டராக இரார். வீட்டுத் தொண்டரா? நாட்டுத் தொண்டரா? இறைமைத் தொண்டரா? எவரெனின் என்ன!

பார்வையில்லாதவர்முன் இருந்த சோற்றை உண்ட, அந்நாய் தானே பிச்சையாரை நேரடி ஆன்மநேயத் தொண்டில் ஆட்படுத்தியது! திருமகளை மருமகளாகப் பெற்றும் தின்னியாக்கப் பெற்ற செல்வியைத் துன்புறுத்த வேண்டா' என்று பரிவோடு பொன்னியம்மையிடம் கேட்க, 'பிச்சை நாயே' என்று தானே விருது வழங்கினார். அவரை என்ன சொன்னார்? அவர் தந்த திருமகளாம் கொடையை என்ன சொன்னார்? "அம்மா நன்றி; நீங்கள் யான் தெய்வத் தொண்டு புரிய வழிகாட்டு கிறீர்கள்" என்றல்லவோ நெஞ்சம் திறந்து பாராட்டு

கிறார். அவர் மான உணர்வு, ஆன்மநேயத் தொண்டில் தலையசைக்கவும் இல்லாமல் மறைந்து போயதே ஏன்? புகழ்ச்சியும் இகழ்ச்சியும் இறைமைத் தொண்டின் இரு பக்கங்கள்! இவற்றுள் முன்னது மட்டுமே கொண்ட இறைமைத் தொண்டர் ஒரோ ஒருவரையேனும் சுட்டிக் காட்ட இயலுமா?

இனி பிச்சையார் பொன்னியம்மை சொன்னது போல் பிச்சை எடுக்கவோ, பெருக்கிக் கூட்டவோ பயன்படுத்திக் கொண்டாரா? உண்டி, உடை, உறையுள் மூன்றன் கொடையிலே வாழ்வு இருக்கலாம்! ஆனால் அப்பிறவி நோக்கம் நிறைவேற - தம் பிறவி நோக்கம் நிறைவேற என்னென்ன செய்ய வேண்டும்? அவ்வளவும் செய்யவே பிச்சையார் அருளகத்தை அடைந்து முழுதுறு அடைக்கலமாக அருளடிகளாரிடம் ஒப்படைப்புச் செய்ததாம்! அவ்வளவுடன் நின்றதா அவர்தம் பணி! தம்மையும் தம்மைச் சார்ந்த முதுவரையும் அருளகத்தில் இணைத்து இசை வெள்ளத்தால் இறைமையைக் குழைத்து ஊட்டி, ஆன்மநேயத் தொண்டில் எத்தனை எத்தனை பேர்க்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அவர் மடியில் கட்டிக்கொண்டு வந்த பொருட் குவியல்தான் என்ன? பொருள் இல்லாமை, அருள் இல்லாமைக்கு இடமாக்கி விடுமா? பொருள் அருள்வளத்திற்கு ஒரு, பக்கத்துணை! அவ்வளவே! அருள் இல்லாப் பொருள், வள்ளல் வள்ளுவரால், "பூரியர் கண்ணும் உள" என்றும், பெருந்தீமை பயப்பது என்றும் கூறப்படும்.

இனி அருளடிகள் தொண்டின் மதிப்பீடு என்ன! அது எந்தக் கோல் கொண்டு அளந்து மதிப்பிடக் கூடியது! எழுதுகோலுக்குள் அடங்காத் தொண்டு நிறைகோல், அளவுகோல் முதலியவற்றுக்குள் ளாகவா அடங்கிவிடும்! அடிகளின் ஒரு நாள் அருள்வாழ்வு, ஒருவர் வாழ்நாள் முழுவதில்கூட அமைதல் உண்டோ என ஏங்க வைப்பது அது.

திருமகளைப் பிச்சையார் அருளடிகளிடம் ஒப் படைக்க அவர் "தெய்வத் திருவருள் கொடையே ஈது" என்கிறார். வளர்ப்புக் கூலி தந்து திருமடத்துக் கொள்ளப்பட்ட தாயையும் சேயையும், "தெய்வமே ஏவ வந்தனை அம்மா" என்றல் லவோ போற்று கிறார். ஏதிலியர் என்னும் சொல் தானும் இறை நம்பிக்கை உடையவர் சொலலாகாது; சொல்லக் கேட்கலாகாது என்றும், அறப்போரை அன்றி அயற்போரை அணுகவே ஆகாது என்றும் பிறர்க் கென வாழும் பெருந்தகை வாழ்வே வாழ்வு என்றும் கொள்ளும் அடிகள் தாமே வாழும் தாயுமானவர்.

செல்வச் செருக்கு எப்படியெல்லாம் பெண்மை யைக் கூட பேய்மையாக்கிவிடுகிறது என்றும், அத்தகைய செல்வப் பிறவி திருந்திவிடின் எத்தனை எத்தனை பேர்கள் கவலையின்றி வாழ வழிகாட்டும் என்றும், பூட்டி அழகு பார்த்த அணிகலம் பிறர் நலங்களை ஊட்டி வளர்க்க உதவுமென மணி மேகலை துறவை ஓவியமாகக் காட்டுவதும்,

தொண்டையே மணந்த துணிவையும் நோக்க அப்பிறவி எவ்வளவு உயர்பிறவி! வழிகாட்ட வந்த வாய்த்த பிறவி பாவை என்பது புலப்படும்.

வன்முறை வன்முறையைப் பெருக்குமேயன்றி, ஒழிக்கவே ஒழிக்காது என்பதற்கு இக்குறும்பாவிகம் தன்னளவில் விஞ்சிப் பொங்குமா கடலெனச் சான்றுகள் காட்டுதல் நோக்கு என்ன? உலகம் உய்ய வேண்டுமானால், அதற்கு இந்நெறியன்றிச் செந் நெறி இல்லை என்பதை நிலைநாட்டவேயாம்!

பாவை திருந்த உதவியது எது?

தங்கத்தாய் முதலியவர் திருந்த உதவியது எது?

எழிலன் நிமிர வழிகாட்டிய தெது?

எல்லாமும் அருள்நெறியே யன்றி அயல்நெறி அன்றாம்!

பனிமலர் யார்? பாரிவேள் யார்? அவர்கள் தொழில் என்ன? அத்தொழிலைத் தொண்டாக்க முனைவானேன்? வாழ்க்கைக் குறைநீக்க வல்லது பொருள் என்றால், வாழ்க்கை நிறைவாக்க என்றும் துணையாவது அருள் என்னும் தெளிவு அல்லவா!

அருளர் ஒருவர் தொண்டை வெல்லவல்லது அல்லவோ ஒரு குடும்பமே அருட்குடும்பமாவது! கற்ற நிறுவனத்தால் பெற்ற பயனைப் பத்தாகப் பெருக்கித் தரும் பெருவாழ்வு வாய்த்துவிட்டால், கல்வி நிறுவனம், மருத்துவமனை, வாழ்வு இல் லங்கள் என்பவை அரசு உதவியை எதிர்பாராமலே

தம்மார்வத் தொண்டாலேயே நிகழக் கூடுமே என்பதை நிலைநாட்ட உதவுவது 'பனிமலர் பாரிவேள்' காட்சி!

நிறைவாக ஒன்று :

திருமகள், பொன்னி, பிச்சை, அருளடிகள், பாவை, சிலம்பாயி, தங்கத்தாய், பூமணி, எழிலன், அங்கயற்கண்ணி, அருள்மலர் இப்பெயர்களின் பளிச்சீடு என்ன? தம்பெயராலும் தூய்மை மொழித் தூய்மை - காக்க வேண்டும்! தம் பெயர்த் தூய்மை மற்றை மற்றைத் தூய்மைகளுக்கும் மூலமுளையாக இருக்க வேண்டும் என்பதற்கேயாம்.

அயன்மொழிப் பெயருடையார், தமிழ்த்தொண்டில் தலைப்பட்டு நின்றும் வழிகாட்டியும் உள்ளனர் அல்லவோ எனின் ஆம்! உண்மையே! அவர் வாழ்ந்த சூழல் வேறு! நாடு மொழி வேறு! சமயச்சார்பு வேறு! இன்னவை மீள்பார்வை பார்த்து மீட்டெடுப்புச் செய்ய வேண்டியவை!

கலப்படமில்லாத எண்ணெய், பால், நெய், அரிசி, பருப்பு என எத்தனை தேடுகிறோம். தேவையிலாக் கலப்படங்களால் ஏற்படும் கேடுகளை உணர்ந்து அவற்றைக் குற்றமாக்கித் தண்டிக்கவும் செய்தல் நடைமுறை அறம் அல்லவோ!

கலப்பு மணம், கலப்பு உரம் என்றெல்லாம் வேண்டுவது தானே எனின், ஆம் அக்கலப்பு ஆக்கக் கலப்பு. ஆனால் மொழிக் கலப்போ ஆக்கக் கேட்டுக்

கலப்பு! ஆதலால் 'கலப்பு நல்லதே' என்னும் முடிவுக்கு வந்துவிடுதல் ஆகாது.

அடி, அத்தம், அதர், ஆறு, இயவு, கடப்பு, கடவு, சாலை, செலவு, தடம், தடி, நடை, நெறி, படி, பதி, பாதை, போக்கு, வதி, வழி, வாய் இவை எல்லாம் சாலை அல்லது வழியைக் குறிக்கும் சொற்கள் அல்லவோ! வழி, பெருவழி, அகல்வழி, பொதுவழி, சாலை நெடுஞ்சாலை, அகல் நெடுஞ்சாலை, பெருஞ்சாலை என விரிவு கொள்ளும் அல்லவோ! இவை ஏன் வழக்கற்றன?

"மார்க்கம், ரஸ்தா, ரோடு" என்னும் அயற் சொற்கள் வந்தன. வந்தவள் வலுத்தாள்; இருந்தவள் கெட்டாள்; மெய்யாக எண்ணுவார்க்கு உண்மை தானே புலப்படும். குறுமை எண்ணம் இல்லை! சிறுமை எண்ணம் இல்லை! அழிவிலா ஆக்க எண்ணம்! காவல் கடமை எண்ணம்! "காவல் குழவி கொள்பவரின் ஓம்புமதி" என்பதும் "தண் தமிழ் வேலித் தமிழ் நாட்டகம்" என்பதும் நம் பாட்டன் வைத்துப் போன பழந்தேட்டு! "மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்" என்பது தொல்காப்பியன் ஆணை! அதனை நிலைப்படுத்திய பெயரீடுகள் இவை என்பதை நினைவுபடுத்தல் நிலைநாட்டல் வழிகளால் சுட்டப்பட்டனவாம்.

**முற்றும்.**

எந்தக் குழந்தை என்றாலும்
எம்தம் குழந்தை எனப்பேணி
இந்தக் குழந்தை எச்சாதி
எந்தச் சமயம் என்பதுவும்
தந்த தாயர் தந்தையர்தாம்
எவரே என்ன எண்ணாமல்
முந்து முந்து வந்தெடுத்து
முத்தாய் வளர்த்துக் காக்கின்றார்.

எவரே உதவி செய்வரென
எவரே பாராட் டெடுப்பரென
எவரே துணைக்கு வருவரென
எண்ணந் தானும் இல்லாமல்
எவரே யேனும் எம்கடமை
இனிது காத்தல் எனக்காக்கும்
இவரே எங்கள் தாயுமானார்
இறைமை வழிவாம் தாயுமானார்.

இரா. இளங்குமரன்